பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 20 வியாழக்கிழமை (06-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 343

### அவசரகால நிலை மீண்டும் பிரகடனம்

## கைதுசெய்ய, தடுத்து வைக்க படைகளுக்கு அதிகாரங்கள்!

கொழும்பு,நவ.6

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நாட்டில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினார். தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகித்து ஜனாதிபதி பிரகடனப் படுத்தியிருக்கும் அவசரகால நிலையின் கீழ் பாதுகாப்புப் படைகளுக்கு பெரும் அதிகாரங்கள் வழங்கப்படும்.

ஆள்களைக் கைதுசெய்தல், சந்தேகநபர்களைத் தடுத்துவைத்தல் ஆகியவையும் இவற்றில் அடங்கும் என்று ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் ஆகிய மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களையும் செவ்வாயன்று கையேற்றதை அடுத்தே ஜனாதிபதி சந்திரிகா அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

இதற்கிடையே, பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கையேற்றிருந்தாலும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் தொடரும் என்று ஜனாதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 கண்டி வீதி மூடப்படவில்லை

### விடுதலைப் புலிகள் தகவல்

கிளிநொச்சி,நவ.6

ஏ-9 வீதி தொடர்ந்தும் பொதுமக்களின் போக்குவரத்துக்காக திறந்திருக்கும். அதனை மூடவேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகள் இவ்வாறு அறிவித்திருக்கின்றனர்.

தென்னிலங்கையில் உருவாகி இருக்கும் அரசியல் நெருக்கடி, நாட்டில் அவசரகால நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியிருப்பது ஆகிய சூழ்நிலையின் காரணமாக ஏ-9 வீதி மூடப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருப்பதை அடுத்தே புலிகள் இவ்வாறு அறிவித்திருக்கின்றனர்.

ஏ-9 வீதியை மூடவேண்டிய நிலைமை இன்னமும் ஏற்படவில்லை.

இந்த வீதியை புலிகள் மூடிவிட்டனர் என்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் திட்டமிட்டு வதந்திகள் பரப்பப்படுகின்றன. ஏ-9 வீதி தொடர்ந்

(16ஆம் பக்கம் பார்க்க)

### அலரி மாளிகையில் நேற்று முற்பகல்

# 127 எம்.பிக்கள் ஒன்றுகூடி அரசுக்கு ஆதரவு தெரிவிப்பு

### முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்க் கூட்டமைப்பு, இ.தொ.கா. உட்பட தோழமைக் கட்சிகள் அனைத்தும் அரசு மீது முழு நம்பிக்கை

கொழும்பு,நவம்பர்6

**ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் அதிரடி நடவடிக்கைகளுக்கு மத்தியில் அரசு தனது பலத்தை எடுத்துக்காட்டும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதன் ஒரு நடவடிக்கையாக நேற்று அலரிமாளிகையில் 127 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி பிரதமர் ரணிலின் அரசுக்கான ஆதரவை உறுதிப்படுத்தி உள்ளனர்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய அனைதது தோழமைக் கட்சிகளின் ஆதரவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசேட கூட்டம் நேற்றுக்காலை அலரிமாளிகையில் நடைபெற்றது. காலை 9.30 மணி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆலோசனை

கொழும்பு,நவ.6

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமான அழைப்பு கிடைக்கும் பட்சத்தில் மட்டும் அவருடனான சந்திப்புத் தொடர்பாக முடிவெடுப்பது என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுற்பகல் கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் கூடிய சமயம் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தன்னைச் சந்திக்கும்படி நாடாளு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு புகழாரம் சூட்டுகின்றது ஜே.வி.பி.!

ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கையில் தாம் திருப்தியடைந்திருப்பதாகவும் நாட்டைப் பாதுகாக்க அவர் மேற்கொண்ட நடவடிக்கைக்குத் தாம் பூரண ஒத்துழைப்பை நல்கப் போவதாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி தம்வசம் பொறுப்பேற்றது குறித்து தமது கருத்தை விளக்கும் ஜே.வி.பியினரின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்குச் சாதகமாக உயர் நீதிமன்றம் தீர்மானம்

கொழும்பு,நவ.6

பாதுகாப்புத்துறை தொடர்பான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும் அதிகாரம் அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கே உண்டு என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் ஏற்பட்ட பாதுகாப்பு அதிகார இழுபறியை அடுத்து அது தொடர்பான சில சட்ட விளக்கங்களை உயர் நீதிமன்றிடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எதுவித மாற்றமும் இல்லை

### கண்காணிப்புக் குழு அதிகாரி

யாழ்ப்பாணம்,நவ.6

அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் [illegible] யப்படவில்லை.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாண அலுவலக அதிகாரி கதரினா மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடி, சமாதான முயற்சிகள் இரண்டு குறித்தும் புஷ்ஷுடன் ரணில் பேச்சு!

வாஷிங்ரன்,நவ.6


கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, சமாதான முயற்சிகள் ஆகியவை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு நேற்று அமெரிக்க நேரப்படி பகல் 11.25 மணிக்கு வாஷிங்ரன் வெள்ளை மாளிகையில் இடம்பெற்றது. சுமார் 30 நிமிடங்கள் நீடித்த இந்தச் சந்திப்பின் பின்னர் மகிழ்ச்சியுடனும், உறுதியுடனும், புதிய தெம்புடனும் பிரதமர் காணப்பட்டார்.

இரு தலைவர்களதும் இச்சந்திப்புக் குறித்து கூட்டறிக்கை இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியாகவில்லை.

சந்திப்பின் பின்னர் பிரதமரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும்

(16ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்காவில் தங்கியிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அந்நாட்டு அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை சந்தித்தார். இருதலைவர்களும் மிக அந்நியோன்யமாகக் காணப்படுகின்றனர். இலங்கை நேரப்படி நேற்றிரவு 10.25 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

## வெளிநாட்டு தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு,நவ.6

கொழும்பில் உள்ள இந்தியா, பிரித்தானியா, நோர்வே ஆகிய தூதரகங்களுக்கு நேற்று முதல் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்தப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் [illegible]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அரசின் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் தேர்தலில் மக்களைச் சந்தித்திருக்கலாம்

## ஜனாதிபதியின் செயல் முறையற்றது என்று தூதுவர்களுக்கு பீரிஸ் விளக்கம்

கொழும்பு.நவ.6

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மீது நம்பிக்கையில்லாவிட்டால், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் மூலம் மக்கள் தீர்ப்பைக் கோரவேண்டும். அதைவிடுத்து மூன்று அமைச்சர்களை நீக்கிவிட்டு அவர்களின் அமைச்சுப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்பது முறையல்ல.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்றுப் பகல் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து தற்போதைய அரசின் நிலை குறித்து விளக்கமளித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பு வெளிநாட்டு அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. அமைச்சருடன் ஐ.தே.க. பிரதித் தலைவரும் அமைச்சருமான கரு ஜெயசூரிய, வெளிவிவகார பிரதி அமைச்சர் லால் கமகே ஆகியோரும் இச்சந்திப்பில் பங்குகொண்டனர்.

அமைச்சர் பீரிஸ் தொடர்ந்து கூறியதாவது:-

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்ததன் மூலம் பல்வேறு நீதிப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படும். இதன் காரணமாக அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதிலும் பிரச்சினைகள் தோன்றும்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சனை திருப்பி அழைக்கும்படி ஜனாதிபதி நோர்வேப் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்தார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு தலைமை தாங்கியபோது பாதுகாபபு அமைச்சருடனோ அல்லது அமைச்சரவையிலோ இது குறித்து ஜனாதிபதி எதுவும் தெரிவிக்கவில்லை. அத்துடன், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆலோசனைகளை ஏற்க வேண்டாம் என அவர் முப்படைத் தளபதிகளுக்கும் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

இது குறித்தும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சரிடம் கலந்தாலோசிக்கவில்லை. ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை அரசியல் லாபம் பெறும் நோக்கைக் கொண்டது. - இவ்வாறு கூறினார். (எ)

# யாழ். நகரப் பகுதியில் வாய்க்கால்கள் புனரமைப்பு

மழைநீர் செல்வதற்கான முறையில் யாழ். நகரப் பகுதி வீதியோர வாய்க்கால்களைப் புனரமைக்கும் பணி கடந்த வெள்ளிக்கிழமை முதல் யாழ். மாநகர சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மழைகாலம் வெள்ளம் வாய்க்கால்கள் வழியாக வழிந்தோடமுடியாதநிலை காணப்படுவதனாலும் -

யுத்தத்தினால் வாய்க்காலின் ஓரங்களில் உள்ள மதிற்சுவர்கள் பல வாய்க்கால்களுக்குள் இடிந்து வீழ்ந்தமையினாலும் -

வாய்க்கால்களை புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக யாழ். கண்டுக்குழி வீதியின் வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

சீரற்றிருக்கும் வாய்க்கால்களில் தண்ணீர் தேங்கி நிற்பதனால் நுளம்புகள் பெருக்கம் அதிகரிக்கின்றது. எனவே, உடனடியாக வாய்க்கால்கள் புனரமைப்பு செய்யப்படவேண்டும் என்று யாழ். சுகாதார வைத்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

வாய்க்கால்களில் இருந்து எடுக்கப்படும் கல், மண் மற்றும் ஏனைய கழிவுப் பொருள்கள் என்பன உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு காக்கை தீவில் கொண்டுசென்று கொட்டப்படுகின்றன. (ம-6-ரி)

# நெருக்கடி நிலையை போக்குவதற்கு பேச்சு நடத்தக் கோருகிறது இந்தியா

புதுடில்லி.நவ.6

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து இலங்கையின் நிலைமை குறித்து இந்தியா கவலை தெரிவித்திருக்கிறது. அரசமைப்பு சட்ட நெருக்கடி ஒன்றைத் தவிர்க்க பேச்சு நடத்துமாறு இந்தியா கோரிக்கை விடுத்திருக்கிறது.

இந்தியா வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளரான நவ்டெஜ் சார்னா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

"இலங்கையில் திடீரென உருவாகியிருக்கும் அரசியல் நிலைமை குறித்து நாம் வியப்படைகிறோம். அந்நிலைமை அரசியல் நெருக்கடி ஒன்றை உருவாக்காது என்று நாம் நம்புகிறோம். அவ்வாறான ஒரு நெருக்கடி இலங்கையின் அரசியல் உறுதிப்பாட்டிலும் நடந்துவரும் சமாதான முயற்சியிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## ஐ.நா. செயலாளர் ஆழ்ந்து அவதானிப்பு

ஐ.நா.நவ.06

இலங்கையின் அரசியல் நிலைமைகளை ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் அவதானித்து வருகிறார் என்று ஐ.நாவிலிருந்து விடுக்கப்பட்ட ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

ஜனாதிபதி குமாரதுங்கவின் தீர்மானங்கள் சமாதான முயற்சியின் மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தா என்று ஐ.நா.செயலாளர் நம்புவதாகவும் சமாதான முயற்சிகளை தான் தொடர்ந்து ஆதரிப்பதை அவர் வலியுறுத்த விரும்புவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# யாழ்.சிறைச்சாலையில் கைதி திடீர் மரணம்!

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ். சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் அங்கு மரணமானார். இவரது சடலம் சிறைச்சாலை அதிகாரிகளால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். குருநகரைச் சேர்ந்த ம.யேசுதாஸன் (வயது-49) என்ற கைதியே சிறைச்சாலையில் உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை குளிக்கச் சென்ற இக்கைதி இருதய நோய் காரணமாகவே மரணமானதாக சிறைச்சாலை அதிகாரிகள் வைத்தியசாலையில் தெரிவித்தனர்.

கசிப்பு வழக்கு தொடர்பாக 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த இந்த நபர் 5 மாத முடிவிலேயே உயிரிழந்துள்ளார். இவருக்கு ஏற்கனவே இருதய நோய் இருந்ததென இறந்தவரின் மனைவி வைத்தியசாலையில் வைத்து பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மரண விசாரணையின் பின்னர் சடலம் நேற்று மாலை உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-8-6-15)






பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, யாழ்.நகரப் பகுதி பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து குறித்த விழிப்புணர்வு நட டிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்று தமது கல்லூரிக்கு முன்பாக அரசடி வீதியின் இருமருங்கிலும் விழிப்புணர்வு பதாகைகளைத் தாங்கியவாறு நின்றபோது... *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# இலங்கை நிலைவரம் தொடர்பாக அமெரிக்கா உன்னிப்பாக அவதானிப்பு

## அமைதி முயற்சியைப் பாதிக்குமெனவும் கவலை

வாஷிங்ரன்.நவ.6

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி துருப்புக்களை கேந்திர நிலைகளுக்கு நகர்த்திய நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது. இலங்கையின் இன்றைய நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

இலங்கை அரசினால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளிலும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களிலும் இந்த நடவடிக்கை எதிர்மறையான விளைவுகளை உருவாக்கலாம் எனவும் அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்கா ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் அடம் ஏரேலி அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டை பத்திரிகையாளர்களுடனான ஒரு சந்திப்பில் தெரிவித்தார்.

20 வருடகால யுத்தத்தின் பின்னர் சமாதானத்தை தேடும் இலங்கையின் முயற்சியின் பின்னால் அமெரிக்கா உறுதியாக நிற்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் ஜனநாயக பாரம்பரியங்களை பாதுகாப்பதற்காகவும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயம் திட்டமிட்டவாறு நடைபெறும் எனவும் அச்செய்தியை அமெரிக்கா வரவேற்பதாகவும் அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் மேலும் கூறினார்.

சமாதானப் பேச்சுக்களால் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் கூறிவந்த ஜனாதிபதி சந்திரிகா, தனது நடவடிக்கைகளுக்குப் பிரதமரின் அமெரிக்க விஜயத்தை பயன்படுத்தியது குறித்து ராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் நடவடிக்கை குறித்து ஐரோப்பிய யூனியனும் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தற்பொழுது உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் சக வாழ்வுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருப்பதாகவும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சகவாழ்வு அவசியமானது என்றும் அறிக்கை ஒன்றில் ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

# பங்குச் சந்தையில் பெரும் பின்னடைவு!

கொழும்பு,நவ.06

ஜனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைக் கையேற்றதை அடுத்து உருவான அரசியல் நெருக்கடி காரணமாக கொழும்பு பங்குச் சந்தையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதன்படி மொத்தச் சுட்டெண் 1,450 இருந்து 1,334 ஆகவும்,

ஸ்ரீலங்கா சுட்டெண், 2,502 இருந்து 2,421 ஆகவும் வீழ்ச்சியடைந்தன. இதற்கிடையே, இந்தியாவிலிருந்து இங்கு வந்து புதிய விமானச் சேவையை ஆரம்பிக்கத் தயாரான ஜெட் எயார் வேய்ஸ் நிறுவன அதிகாரிகள் தமது முதலீட்டை இடைநிறுத்திவிட்டு அவசரமாக இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளனர். (ஐ)

# நீதிச்சேவையினர் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,நவ.6

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு கொண்டுவந்துள்ள குற்ற விசாரணைப் பிரேரணைக்கு ஆட்சேபனை தெரிவித்து இலங்கை முழுவதும் உள்ள நீதிச் சேவையினர் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மேல்நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளும் இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், இந்த நீதிமன்றங்களின பதிவாளர்கள்,எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள் மற்றும் சுருக்கெழுத்தாளர்களும் வேலைநிறுத்தத்தில் இணைந்துகொண்டதனால் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

நேற்றைய தினம் வழக்கு விசாரணைகளோ, வழக்குத் தாக்கல் செய்வதோ ஏனைய இதர தேவைகளோ நீதிமன்றங்களில் நடைபெறவில்லை.

இன்று நீதிச்சேவையினரின் சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## தனித்தரப்புக்கும் மாற்று யோசனைக்கும்

# அரசு வழங்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே மு.கா. தீர்மானங்கள்

சமாதானப் பேச்சில் முஸ்லிம் தனித்தரப்பு, முஸ்லிம் காங்கிரஸின் மாற்று யோசனைகளுக்கு அரசு முக்கியத்துவமளித்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இன்றைய அரசியல் நெருக்கடி குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானங்களை மேற்கொள்ளும் என்று அதன் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் அதி உயர் பீடத்தின் அவசரக் கூட்டத்தை அடுத்தே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

மு.கா. அதியுயர் பீடத்தின் அவசரக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சமாதான முன்னெடுப்புக்கள் மற்றும் புதிய அரசியல் சூழ்நிலை போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. எக்கட்சி ஆட்சியில் இருந்தாலும் இனப்பிரச்சினைக்கான இடைக்கால மற்றும் இறுதித் தீர்வுகள் பேச்சுவார்தையினூடாகவே அடையப்படவேண்டும் என்ற கட்சியின் நிலைப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

★ பேச்சுவார்த்தை முன்னெடுப்பில் முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

★ முஸ்லிம்களது உரிமை, இருப்பு, பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தக் கூடிய தனித்துவமான சுயாட்சி அலகு வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை உள்ளடக்கிய முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுயோசனைகள் இன்றும் இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும். அப்பிரேரணைக்கு சமாதான முக்கியத்துவம் அரசால் வழங்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணம்

# நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் மோசடி: ஜோர்ஜியாவில் கலவரம் வெடிக்கும் அபாயம்!

ஜோர்ஜியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் மோசடி நடந்திருக்கிறது. இதனால், அங்கு கலவரங்கள் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரச எதிர்ப்புப் போராட்டங்கள் அங்கு சூடுபிடித்துள்ளன. இந்தப் போராட்டங்கள் கலவரமாக மாறுமிடத்து அதனைக் கட்டுப்படுத்த கலகமடக்கும் பொலீஸாரும், படையினரும் தயார்நிலையில் உள்ளனர்.

தேர்தல் முடிவுகளின்படி ஆளுங்கட்சி பெருவெற்றியீட்டியுள்ளது. ஆனால், தேர்தலில் மோசடி செய்தே ஆளுங்கட்சி வென்றது என்று எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதி எட்வேர்ட் ஷிவாஸ்நாக் பதவிவிலக வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர்.

ஆனால், ஜனாதிபதி எதிர்க்கட்சியினது கோரிக்கையை ஏற்கமறுத்துள்ளார். தான் உத்தியோகபூர்வ முடிவுகளை ஏற்றே செயற்படப்போகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், அங்கு கலவரங்கள் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் வாக்குகள் இன்னமும் முழுமையாக எண்ணப்படவில்லை. ஒரு பகுதி எண்ணப்பட்ட நிலையிலேயே எதிர்க்கட்சிகள் தேர்தலில் பெரும் மோசடி நடந்ததாகக் கூறியுள்ளன.

இதனால், வாக்கு எண்ணும் பணி நேற்று நள்ளிரவு திடீரென நிறுத்தப்பட்டது. அங்குள்ள அமெரிக்கத் தூதர் இந்த விடயத்தில் தலையிட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொண்டதையடுத்து, மீண்டும் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமாகியது.

எனினும், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றன. தலைநகர் ரிப்ளிஸியில் ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு வலியுறுத்தினர்.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி ஆளுங்கட்சியே முன்னணியில் நிற்கிறது. ஆனால், தேர்தலில் மோசடி நடைபெற்றதை சர்வதேச அவதானிகள் உறுதிசெய்துள்ளனர்.

எதிர்க்கட்சி வாக்காளர்களை மிரட்டி ஆளுங்கட்சி வாக்காளர்கள் பெருமளவான கள்ள வாக்குகளைச் செலுத்தினர் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

சோவியத்தின் ஒருபகுதியாகத் திகழ்ந்த ஜோர்ஜிய நாடாளுமன்றத் தேர்தல் விவகாரத்தில், அமெரிக்கா தலையிட்டிருக்கிறது.

தேர்தல் வாக்குகள் முறைப்படியாக எண்ணப்பட வேண்டுமென்றும், வாக்காளர் பட்டியலில் குளறுபடி நடத்துள்ளது என்றும் அது கூறியிருக்கிறது.

தேர்தலின் இறுதி முடிவுகள் எப்போது அறிவிக்கப்படுமென இதுவரை எதுவித அறிவித்தலும் வெளியாகவில்லை. முடிவுகள் வெளியாகும் அன்றைய தினம் அங்கு கலவரங்கள் மூளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கலவரங்கள் மூண்டால் அதனைத் தடுப்பதற்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



ஜோர்ஜியாவில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

## அமெரிக்காவுக்காக பலிக்கடா ஆக்குவதா?

# ஈராக்கிற்குப் படை அனுப்ப துருக்கி அடியோடு மறுப்பு!

ஹன்பரா,நவ.6

ஈராக்கில் தமது படையினரைப் பலிக்கடாவாக்க முனையும் அமெரிக்காவுக்கு துருக்கி மறுப்புத் தெரிவித்துள்ளது.

எக்காரணம் கொண்டும் துருக்கிப் படை ஈராக்கிற்கு அனுப்பப்படமாட்டாது என்று துருக்கி வெளியுறவு அமைச்சு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஈராக்கிற்கு இராணுவ உதவிகேட்டு எடுத்துவரும் முயற்சிகளுக்கு துருக்கியின் இந்த மறுப்பு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால், அமெரிக்கா மேலும் சில ஆயிரம் படையினரை ஈராக்கிற்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேட்டோவின் ஒரேயொரு முஸ்லிம் உறுப்பு நாடான துருக்கி, 10,000 படையினரை ஈராக்கிற்கு அனுப்பும் என்று அமெரிக்கா எதிர்பார்த்தது. இதற்கான பேச்சுக்கள் நடந்துவந்தன.



இந்நிலையில், அமெரிக்காவுக்கான துருக்கியின் தூதுவர் ஒஸ்மான் பாடுக் தலைமையிலான குழு, தமது நாட்டுப் படையை ஈராக்கிற்கு அனுப்ப மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

ஈராக் இடைக்கால நிர்வாகசபை இந்த விடயத்தில் தெளிவான வேண்டுகோள் ஒன்றை விடுக்காமல் உள்ளதால், படை அனுப்புவது குறித்து முடிவு செய்யமுடியாது எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாகசபைக்கு அழுத்தம் கொடுத்து, அத்தகைய அழைப்பை நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமெனவும் அக்குழு அமெரிக்காவுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

ஆனால் இடைக்கால நிர்வாகசபை மேற்படி அழைப்பை நாடுகளுக்கு அனுப்பபின்னடித்துள்ளது.

1984ஆம் ஆண்டு முதல் ஈராக்கின் குர்திஷ் போராளிகளுக்குத் துருக்கி உதவிவந்தது. இப்போதும் ஈராக் - துருக்கி எல்லையில் ஆயிரக்கணக்கான துருக்கிப் படையினர் உள்ளனர். ஆனால், துருக்கிப் படையினர் ஈராக்கினுள் நுழைந்தால் குர்தீஷ் போராளிகளின் கை மேலோங்கிவிடும் என்று இடைக்கால நிர்வாகசபை அஞ்சுகிறது.

இதன்காரணமாகவே துருக்கிக்கு மேற்படி அழைப்பை விடுக்க இடைக்கால நிர்வாகசபை பின்னடித்து வருகிறது.

அத்துடன், அமெரிக்காவுக்கு எதிரான அபிப்பிராயமே துருக்கியில் நிலவுகிறது. இந்நிலையில், துருக்கிப் படை ஈராக்கிற்கு வந்தால், அது அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கையை பலமாக்கிவிடும் என்றும் இடைக்கால நிர்வாக சபை அச்சம் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை,

ஈராக்கிற்கு சர்வதேசப் படைகளும் பணமும் கொடுத்துதவ வேண்டுமென ஐ.நா.சபையில் அமெரிக்கா கடந்த மாதம் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. எனினும், இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக இதுவரை எந்த நாடுகளும் படையை ஈராக்கிற்கு அனுப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், ஈராக்கின் பாதுகாப்பை பலப்படுத்த அமெரிக்கா, காவல் படையினரை அங்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது.

2004 ஜனவரியில் 15 ஆயிரம் அமெரிக்க காவல் படையினர் அங்கு விரைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



சூரியனின் மேற்புறத்தில் இதுவரை இல்லாத அளவில் பாரிய தீப்பிளம்பு வெளிக்கிளம்பியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தீப்பிளம்புடன் சூடான வாயுத்திரள் ஒன்றும் வெளிவிடப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த வாயுவின் ஒரு பகுதி பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும் அது பூமியை வந்தடைய சுமார் 10 நாள்களாகலாம் என்றும் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். சூரியனின் மேற்புறத்திலிருந்து தீச்சுவாலைகள் வெளியேறுவதைப் படங்களில் காணலாம்.

# இரண்டு நீதிபதிகள் ஈராக்கில் கொலை!

ஈராக்கில் கடந்த இருதினங்களுக்குள் இரண்டு நீதிபதிகள் கொல்லப்பட்டனர். இவர்களின் ஒருவர் அவரது வீட்டு வாசலில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றொருவர் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

மொசுல் நகர நீதிபதி யூசுப் நஜாப், நகர நீதிபதி ஜாபர் அல் சோயிலி ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

அமெரிக்கப் படையினருக்குச் சார்பாக தீர்ப்புக்கூறி வந்ததாலேயே இவர்கள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் படையினரை எதிர்த்து வந்த கெரில்லாக்கள தற்போது அமெரிக்க ஆதரவுடைய அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் குறிவைத்துள்ளனர்.

சதாமின் பாத் கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான சிறப்பு ஆணைக்குழுத் தலைவராக நஜாப் நகர நீதிபதி ஜாபர் அல் சோயிலி செயற்பட்டு வந்தவர் என்றும் கூறப்படுகிறது.

அதேநேரம் இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்கள் இருவர் நேற்று கைக்குண்டு வீசிக் கொல்லப்பட்டனர்.

# ஸ்பெயின் இராஜதந்திரிகள் ஈராக்கிலிருந்து வெளியேறினர்!

ஈராக்கில் உள்ள ஸ்பெயின் இராஜதந்திரிகள் 25 பேர் நேற்று அங்கிருந்து திடீரென வெளியேறினர்.

இவர்கள் ஜோர்தானிற்கு சென்றுள்ளனர். அங்கிருந்தவாறே ஈராக் விடயங்களை கவனிப்பர்.

இராஜதந்திரிகள் வெளியேறியதை ஸ்பெயின் வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

ஐ.நா. பணியாளர்கள், செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர், சர்வதேச உதவி நிறுவனங்களின் அதிகாரிகளை குறிவைத்து ஈராக்கில் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு அஞ்சியே இவர்கள் வெளியேறினர் என்று கூறப்படுகிறது.

ஈராக்கில் 1,300 ஸ்பெயின் படையினர் பணிபுரிகின்றனர். இவர்களில் இருவரை கடந்த மாதம் கெரில்லாக்கல சுட்டுக் கொன்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, ஈராக்கின் பாதுகாப்பு மிக்க பகுதி எனக் கருதப்படும் பச்சை வலயம் எனப்படும் பகுதியில் கெரில்லாக்கல் நேற்று திடீர் தாக்குதலை நடத்தினர்.

இங்குள்ள அமெரிக்க இராணுவத தலைமையகத்தில் இரண்டு மோட்டார் குண்டுகள் முதலில் வீழ்ந்து வெடித்தன. தொடர்ந்து கிரனேட் வீச்சு நடைபெற்றது.

இதில் மூன்று படையினர் காயமடைந்தனர்.

சதாம் ஹுசைனின் மாளிகையில் இயங்கிவந்த இராணுவத் தலைமையகமே தாக்கப்பட்டது. எனினும், மாளிகை சேதமடையவில்லை என்று பென்டகன் கூறியுள்ளது.

உலக அரங்கில்

# காட்டுத்தீ பாதித்த இடங்களை அமெ.அதிபர் பார்வையிட்டார்

கலிபோர்னியாவின் பலபகுதிகளில் பரவிய காட்டுத்தீயால் எரிந்து நாசமான இடங்களை அமெரிக்க ஜனாதிபதி புஷ் தம்பதி நேற்றுமுன்தினம் பார்வையிட்டது.

கலிபோர்னிய மாகாணத்திற்குச் சென்ற ஜனாதிபதி புஷ் தம்பதி மாகாண ஆளுநர் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் சகிதம் தீயில் எரிந்து நாசமான இடங்களைப் பார்வையிட்டது.

எங்குசென்றாலும், தனது செல்லப்பிராணியான நாயையும் கூடவே கொண்டு செல்லும் ஜனாதிபதி புஷ், எரிந்து நாசமான இடங்களைப் பார்வையிடச்சென்றபோது நாயைக்கொண்டு செல்லவில்லை.

எரிந்த இடங்களைப் பார்வையிட்ட போது ஜனாதிபதி புஷ் நெஞ்சுருகினார் என்று ஆளுநர் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் தெரிவித்தார்.

அப்பகுதி மக்களுடனும் ஜனாதிபதி புஷ் உரையாடினார். அங்கு நின்றவர்கள் தமது சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

தீயை அணைக்கப் பாடுபட்ட தீயணைப்புப் படையினரையும் ஜனாதிபதி புஷ் தம்பதி சந்தித்துக் கலந்துரையாடியது. அங்கு, தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது எரிந்து சாம்பலான வீரருக்கு ஜனாதிபதி புஷ் அஞ்சலி செலுத்தினார்.

# நகரசபை, சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 20.11.2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதேதினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) 'தரம் எம்9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகைமையுடையவராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களை பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு ரூபா | சத | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் வற்றுடன் ரூபா | சத |
|---|---|---|---|---|
| 01.பொதுமலசல கூடத்தின் மதிற்சுவர் மற்றும் வேலி அமைத்தல் | 1000 | 00 | 600 | 00 |
| 02.பொதுமலசலகூட காவலாளிக் கொட்டகை அமைத்தல் | 2000 | 00 | 600 | 00 |
| 03.சந்தை வடிகால் திருத்தம் | 2000 | 00 | 600 | 00 |
| 04.கொல்களத்திற்கான கழிவகற்றும் குழி அமைத்தல் | 500 | 00 | 600 | 00 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 18.11.2003 ஆம் திகதி நண்பகல் 12.00மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக்கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி *செயலாளர், நகரசபை, சாவகச்சேரி* என்ற முகவரிக்கும் இணைப்பிரதி *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் 20.11.2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி,*
*05.11.2003.*

மு.செ.சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

(C-31154)(32)

## 'கிறஷைரை' இடம்மாற்றக் கோரிக்கை

இணுவில் பகுதியில் குடியிருப்புக்களுக்கு அண்மையில் இயங்கி வரும் கல் உடைக்கும் தொழிற்சாலையை வேறிடத்துக்கு மாற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இணுவில் பூவோடை மயானத்துக்கு சமீபமாக குடிமனைகள் மற்றும் தோட்டக் காணிகள் என்பவற்றுக்கு மத்தியில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இக்கல்லுடைக்கும் தொழிற்சாலையினால் அப்பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இத்தொழிற்சாலையை வேறிடத்துக்கு அகற்றுமாறு அப்பகுதி மக்கள் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய இடங்களில் முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வீட்டுத்தாதிகள் சேவைக்கு ஆள்சேர்ப்பு

ST. JOHN AMBULANCE

**நாள் ஒன்றுக்கு கொடுப்பனவாக 210/- ரூபாவிலிருந்து 250/- ரூபாவரை வழங்கப்படும்.**

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸால் நடத்தப்பட்டுவரும் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை 16-11-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். போதனாவைத்தியசாலையிலுள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புக் காரியாலயத்தில் நடைபெறும்.

16-11-2003 இற்கு முன் சுயவிவரக்கோவையை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். இச்சேவைக்கு தெரிவாகப்படுவோர் தொண்டர் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இச்சேவையாளர் தரத்தில் 6 மாத கால சேவையைப் பூர்த்திசெய்தவர்களுக்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தால் (HOME NURSING (PART II) தரத்திற்கான பரீட்சை சர்வதேச பாடத்திற்கு அமைய நடத்தப்படும். இதில் சித்தியடைந்தவர்களுக்கு N.H.Q சான்றிதழ் வழங்கப்படும். சேவை நேரத்தில் கறுப்பு, வெள்ளை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சீருடை அணிந்து சேவையில் ஈடுபடவேண்டும். மேலதிக விபரத்துக்கு T.P: 222 - 3166 உடன் தொடர்புகொள்ளவும். *(இச்சேவை இலங்கையிலும் உலகலாவிய ரீதியிலும் செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது)*

*சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்,*
*நோயாளர் பராமரிப்பு காரியாலயம்,*
*யாழ்./ போதனா வைத்தியசாலை.*

படை அத்தியட்சகர்,
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ்ப்பாணம்.

(24461) (31-14-17)



உதயன்

## ஊசலாடுகின்றது ஒப்பந்தம்!

தேசிய அரசியலையே கலங்கடிக்க வைக்கும் விதத்தில் அதிரடி நடவடிக்கை எடுத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதன் மூலம் தற்போதைய சமாதான முயற்சிகளின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றார்.

அமைதி முயற்சிகள் வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாக வீணாகிப் போகுமோ என்ற அச்சத்தை ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் உருவாக்கியிருக்கின்றன.

நாட்டைப் பல தசாப்தங்களாக உலுக்கி வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - பேச்சு மூலம் - தீர்வு என்ற கோஷத்துடன் 1994 இல் பதவியைப் பிடித்த ஜனாதிபதி குமாரதுங்க, சில காலத்தின் பின்னர் சமாதானத்துக்கான யுத்தம் என்ற விநோதக் கொள்கையைப் பிரகடனப்படுத்தி முழு நாட்டையுமே பெரும் போரில் சிக்க வைத்துப் பேரழிவுக்குள் தள்ளினார்.

2001 டிசெம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐ.தே. முன்னணி அரசின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற முட்டாள்தனமான கொள்கைப் போக்கிலிருந்து நாட்டின் தலைமைத்துவத்தை விடுவித்து, தமக்கு ஆதரவாக சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை உருவாக்கி அதன் உதவியுடன் 'சமாதானத்துக்கான பேச்சு', 'அமைதிக்கான கலந்துரையாடல்' என்ற திசையில் நாட்டை நகர்த்தினார்.

இப்போது தென்னிலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் இடையில் புதிதாக அதிகார இழுபறி - அரசியல் 'பிடுங்குப்பாடு' உருவாகியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளோடு சமரசம் பேசி, யுத்தநிறுத்தம் மேற்கொண்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அமைதி வழியை நாடும் ரணிலின் அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு போன்றவற்றை ஜனாதிபதி குமாரதுங்க பிடுங்கிக்கொண்டு விட்டார். அவையெல்லாம் இப்போது நேரடியாக ஜனாதிபதியின் கைகளில்.

பிரதமர் ரணிலையும் அவரது சமாதான முயற்சிகளையும் - ஏன் அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கூட - மிக மோசமாகவும், கடுமையாகவும் விமர்சிக்கின்ற ஜனாதிபதியின் கைகளில் இப்போது நாட்டின் முழுப் பாதுகாப்பு விவகாரங்களும், உள்துறை விடயங்களும் உள்ளன.

யுத்தநிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய முடிவுகளை எடுக்கும் முழு அதிகாரமும் - ஜனாதிபதியின் தற்போதைய நடவடிக்கைகள் காரணமாக - பிரதமர் ரணிலின் அரசிடமிருந்து பறிபோய்விட்டன. இப்போது அவை ஜனாதிபதியின் கைகளில்; அதுவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மோசமாக விமர்சிப்பவரின் பொறுப்பில் இருக்கின்றன.

அப்படி இருக்கும் போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசுத்தரப்பில் கைச்சாத்திட்டிருக்கும் பிரதமர் ரணில், எவ்வாறு அது தொடர்பான ஏற்பாடுகளை, நடவடிக்கைகளை தனதுகட்டுப்பாட்டில் வைத்து ஒப்பந்த வாசகங்கள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யப் போகின்றார்? எப்படி அவரால் உறுதிசெய்ய முடியும்?

தனது கட்டுப்பாட்டில் இல்லாத விவகாரம் குறித்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு, அது தாக்குப் பிடிக்க வேண்டும் என்று பிரதமரோ, அவரைச் சார்ந்தவர்களோ எதிர்பார்ப்பது எங்ஙனம் நியாயம்?

தாம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளால் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பங்கமில்லை என்றும் -

அது தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் -

அதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை என்றும் ஜனாதிபதி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.


இதை ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் எம்.பி. நேற்று தாம் நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டில் வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி என்ன கூறினாலும் அவருடைய இப்போதைய நடவடிக்கைகளால் முதலில் கேள்விக்கு உள்ளாகியிருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் கீழான யுத்தநிறுத்த ஏற்பாடுகளும்தான்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை இந்த விவகாரத்தை நன்கு புரிந்துகொண்டிருப்பதன் காரணமாகவே அமைச்சுக்களைப் பிடுங்கும் ஜனாதிபதியின் நடவடிக்கை தொடர்பாக அவை கவலை வெளியிட்டிருக்கின்றன.

இலங்கை அரசினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளிலும் விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களிலும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் பாதகமான விளைவுகளை உருவாக்கும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் வர்ணித்திருப்பது இந்தக் காரணத்தில்தான்.

## காலத்தின் பதிவு



தொடுவானம் தொலைவிலில்லை.... படம்: நாமக

# தொலைந்த வாகனங்கள், ஆவணங்கள் பற்றி மோட்டார் திணைக்களத்தில் முறையிடுக!

### உதவி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.6

வாகனங்கள் திருட்டுப்போனாலோ அல்லது காணாமற் போயிருந்தாலோ, வாகனங்களுக்குரிய ஆவணங்கள் தொலைந்திருந்தாலோ, அவற்றின் உரிமையாளர்கள் இது தொடர்பாக மோட்டார் திணைக்களத்தில் உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

வாகனங்களோ அல்லது வாகனங்களுக்குரிய ஆவணங்களோ இழக்கப்பட்டிருந்தால் அவை காணாமற்போன உடனேயே அது தொடர்பாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடமும் அண்மையில் உள்ள பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், யாழ்.மாவட்டத்திலுள்ள வாகன உரிமையாளர்களில் பலரும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இதனால், வாகனங்களை அபகரித்து வைத்துள்ளோர் கடந்த காலயுத்தங்களைக் காரணம் காட்டிப் பொய்த் தகவல்களைக் கூறி வாகனப்பதிவு மற்றும் வாகன உடைமை மாற்றம் என்பனவற்றை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

அண்மையில் யாழ்.செயலகத்தில் மோட்டார் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது பல வாகனங்கள் இவ்வாறு தவறான தகவல்கள் வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக எமக்குத் தெரியவந்துள்ளது.

தொடர்ந்தும் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கோடு மோட்டார் திணைக்களம் வாகனங்கள் மற்றும் ஆவணங்களை தவறவிட்டோரது விவரங்களைத் திரட்டி வருகிறது.

ஆகவே, வாகனங்கள் மற்றும் ஆவணங்களைத் தவறவிட்டோர் வாகன இலக்கம், அடிச்சட்ட (செசி) இலக்கம் மற்றும் இயந்திர (எஞ்சின்) இலக்கம் என்பனவற்றின் பூரண விவரங்களை யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்வது நன்மை பயக்கும்.

இதேவேளை, மோட்டார் திணைக்களத்திற்கு நேரடியாக விவரங்களைத் தெரிவிக்க விரும்புவோர், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம், 341, எல்வற்றிகல மாவத்த, கொழும்பு - 1 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

இதுதொடர்பாக அருகிலுள்ள பொலீஸ் நிலையத்திலும் முறையீடு செய்வது அனுகூலமானது என்று அவர் தெரிவித்தார். (ஓ-5)

## வாகனப் பதிவுக்கு கையெழுத்து பெற்றவர்களின் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம்,நவ.6

மோட்டார் போக்குவரத்துத்-திணைக்களம் நடத்திய நடமாடும் சேவையின்போது வாகனங்களைப் பதிவுசெய்வதற்கு மோட்டார் திணைக்கள ஆணையாளரிடம் கையொப்பம் பெற்றவர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வாகனப்பதிவுக்கான விண்ணப்பத்தில் ஆணையாளரிடம் கையொப்பம் பெற்ற வாகன உரிமையாளர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் திணைக்களத்திற்கு நேரில் வந்து பதிவு மேற்கொள்வதற்கான திகதியைப் பெற்றுக்கொள்ளலாம். அச்சமயத்தில் பதிவு செய்யப்படவேண்டிய வாகனம் எடுத்து வரப்பட வேண்டியதில்லை. ஆனால், மேற்குறிப்பிட்ட தினங்களில் பதிவிற்கான திகதியை பெற்றுக்கொள்ளத் தவறுபவர்கள் எதிர்காலத்தில் வாகனப் பதிவை மேற்கொள்ள முடியாது போகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாகனங்களுடைய உடைமை மாற்றம், சாரதி அனுமதிப்பத்திரம், பதிவுச் சான்றிதழ் என்பனவற்றின் மூலப் பிரதிநிதிகளையும் இத்தினங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், மேற்படி பணிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் -

அப்பணிகளே தற்போது மாற்றப்பட்டு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையில் இடம்பெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

### நாளை

ஐப்பசி 21
வெள்ளிக்கிழமை
(07.11.2003)
திதி : சதுர்த்தசி
பின்னிரவு 5.10 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முற்பகல் 11.34 வரை
சுபநேரம்: 6.05-7.35
ராகுகாலம்: 10.35-12.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை அமைக்கின்றது.

## வயது முதிர்ந்தவர் பேரவை குடாநாட்டில் அமைப்பு

வலி.வடக்கு,ஒக்.6

யாழ். குடாநாட்டில் வயது முதிர்ந்தவர்களுக்கான பேரவை ஒன்றை அமைப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கையெடுத்துள்ளது.

'தேசிய வயது முதிர்ந்தவர் பேரவை' என்ற பெயரில் இந்த அமைப்பு எதிர்காலத்தில் செயற்படவுள்ளது.

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புள்ளி விவரக கணக்கீட்டின் அடிப்படையில் குறிப்பிட்ட சில கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து முதியவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதற்காக இப்பிரிவுகளில் உள்ள வயது முதிர்ந்தவர்களின் முழுவிவரங்களையும் அவ்வப்பகுதி கிராம அலுவலர்கள் மற்றும சமூக சேவைகள் அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று பெறவுள்ளனர்.

முதியோர்களின் நலன்களை கவனிப்பதற்காகவே சமூகசேவைகள் திணைக்களம் இப்பேரவையை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(ம-86)

## மாணவனைக் காணவில்லையென மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.6

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவனைக் கடந்த சுமார் ஒருமாத காலமாக காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரணவாய் மத்தி, பிரான்பட்டி என்ற இடத்தைச் சேர்ந்த கனகரட்ணம் திருமாறன் (வயது 15) என்ற மாணவனே காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்த இம்மாணவன் கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தனது வீட்டுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு இரண்டு நண்பர்களுடன் விடுதியிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் -

பின்னர் அவர் வீடுதிரும்பவில்லை எனவும் - கூறப்பட்டது.

பிரஸ்தாப மாணவனுடன் சேர்ந்து புறப்பட்ட மற்றைய மாணவர்கள் இருவரும் தத்தமது வீடுகளுக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இம்மாணவன் தொடர்பாகத் தகவல் அறிந்தவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது 222 2025 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா கேட்டுள்ளார். (ஓ-4)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு பிறந்த, அனுஷ நட்சத்திர, சைவ போசன மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. சீதனம் உண்டு. வெளிநாட்டு வரன்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2087, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24443)

## வீடு வாடகைக்குண்டு

27, ஸ்ரேசன் றோட், கொக்குவிலில் 7 அறைகள், 3 இணைந்த குளியலறைகள், வாகனத்தரிப்பிடம், மேலதிக வாகனத்தரிப்புக்கான இடவசதி என்பன அமைந்த வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: க.சிவராசா T.P.: 077 7561341 (அலுவலகப் பாவனைக்கு ஏற்ற வீடு). (24446)

## வீடு விற்பனைக்கு

கண்டிக்குளி, கொழும்புத்துறை வீதியில் சுண்டிக்குளி மகளிர், சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. வேறு வீடு கட்டவும் இடவசதி உண்டு. தொடர்பு: புதிய இல. 50/7 (பழைய இல.38), கொழும்புத்துறை வீதி (விதானையார் வீதிக்கு அருகில்), சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு - தொலைபேசி: 0112360083 (24415)

## விதைநெல் விநியோகம்

தென்மராட்சி,நவ.6

உலக உணவு நிறுவனத்தினால் நெற்செய்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்கென இலவசமாக வழங்கப்பட்ட விதைநெல் மற்றும் உர வகைகள் என்பன அண்மையில் மீசாலை கிழக்குப் பகுதி நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. அப்பகுதி கிராம அலுவலரால் சிபாரிசு செய்யப்பட்ட விவசாயிகளுக்கே இவை வழங்கப்பட்டன. (ஐ-10-117)

## காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோயிலுக்கு அருகில், பொக்குண வீதியில் சுற்றுமதிலுடனும் கிணற்றுப் பங்குடனும் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 031 2233732 (பிற்பகல் 3.00 மணிக்குப் பின்). (சி-31135)

4½ பரப்புக் காணி நிலம் (சேதமடைந்த நிலையில் உள்ள வீட்டோடு) பெரும்குளம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியில் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 074 - 404942

(சி-31145)

## தேவை

கொழும்பில் கௌரவமாக வாழும் தம்பதியருக்கு சமையலிலும் வீட்டு வேலைகளிலும் உதவிசெய்ய 32 - 40 வயதுக்கிடையிலான குடும்பப் பொறுப்புகளற்ற பெண் ஒருவர் தேவை. விதவைகள், விவாகரத்துப் பெற்றோர், ஆதரவற்றோர் விரும்பத்தக்கது. வாழ்நாள் முழுவதும் அவர்களுடனேயே இருக்கமுடியும். தொடர்பு: S.V.குணபாலன். T.P.: 222 5844.

(24448)

## வாடகைக்குத் தேவை

தகவல் தொழில்நுட்பப் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் 800 முதல் 1000 ச.அடி வரையிலான ஒரு கட்டடம் அல்லது வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: S.V. குணபாலன்.

T.P.:222 5844 (24449)

## சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்துவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா

(24196) (24-13-16) தெஹிவளை.

## 13ஆம் ஆண்டு நினைவாக....

தாய்மண் மகிழ 1966 - 01 - 10



தமிழீழம் மலர 1990 - 11 - 06

### பொன்னுத்துரை ஜீவா
### லெப்டினன்ட் சுஜி

(பரப்புக்கடந்தான், மன்னார்)

*ஆண்டுகள் 13 ஆனதய்யா*
*ஆறவில்லை எம்துயர்.*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:*

யாழ்ப்பாணம். (24453) (26-13-16-24) - குடும்பத்தினர்.

## நாளை ஆரம்பம்

## புதிய வாழ்வு
## யோகாசனம்

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் யோகாசன வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

ஆசனம், பிரணாயாமம், கிரியா - முத்ரா தியானம் ஆகிய பயிற்சிகள் அனைத்தும் அளிக்கப்படும்.

இந்த பயிற்சிகள் மூலம் நீங்கள் அடைவது

- ★உடல் ஆரோக்கியம்
- ★வாழ்க்கை பற்றிய சரியான நோக்கு
- ★அன்பான மனநிலை
- ★ஞாபகசக்தி,
- ★மன அமைதி
- ★தெளிந்த மனநிலை

★ மாணவர்கள் ஞாபகசக்தியை மேம்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற விசேட பயிற்சிகளும் வழங்கப்படும்.

★ ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும். நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வளமும் இருக்கும்.

ஆசிரியர்:
ம.நேசராஜ் (கண்ணன்)
NATIYAKALAIMANI
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்தியா).
Diploma in Yoga Therapy,
D.YOGA, D.H.I.Home,
M.I.B.R.
M.S. 1st Year
T.P.: 077 - 6150570

வகுப்புக்கள் ஆரம்பம்
நாள்: 07.11.2003
நேரம்: மாலை 5.30
இடம்: அன்பகம் Y.M.H.A பாலர் பாடசாலை, தொம்மை வீதி, உடுவில்.

(24450) (25-13-16-24)

*நீங்களும் புதிய வாழ்வு பயிற்சி பெற்று உங்கள் வாழ்க்கையை ஓர் அற்புத கலையாக மாற்றலாமே! வாருங்கள் வந்து பயனடையுங்கள்.*

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர சேவைக் குத்தகை என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2004

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பரசேவை நிலையம் ஆகியவற்றை 01.01.2004 ஆம் திகதி முதல் 31.12.2004 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 28.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப் பிணைப்பணமும், கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 300/- (பெறுமதி சேர் வரியுட்பட)வும் செலுத்துவதன் பேரில் 27.11.2003 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணிவரையும் யாழ். மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 28.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப் பெற்ற கேள்விகள் 28.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30மணிக்கு கேள்விச் சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு:

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50%இற்குச் சமனான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாத முறி சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தைகளை குத்தகைக்குப் பெறுபவர்கள் சந்தைக்கு வரும் பொருள்களின் பெறுமதியின் மூன்று வீதத்துக்கு (3%) மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2.00க்கு, மோட்டார் சைக்கிளுக்கு ரூபா4.00வுக்கும் மேலதிகமாக பாதுகாப்பு வரி அறவிடக்கூடாது.
4. தங்களால் கோரப்படும் கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 20% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், விளம்பர சேவைக்கான நிலையத்திற்கும் மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.
6. ஜின்னா வீதியில் இருந்த இறைச்சிக் கடைகளுக்கு பதிலாக மானிப்பாய் வீதியில் தனியார் காணியில் இறைச்சிக் கடைகள் நடத்த அனுமதி வழங்கப்படும். எனினும், இடத்தை குத்தகைக்காரரே தெரிவுசெய்ய வேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
7. பாசையூர் பகுதியில் உள்ள இறைச்சிக் கடைகள் இராணுவ காவலரண்களுக்குள் அமைந்திருப்பதால் குத்தகைக்காரரே இடத்தைத் தெரிவுசெய்ய வேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

## அட்டவணை

| தொ. இல. பொதுச்சந்தைகள் | கடை இல. | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (20% பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. பண்ணை மீன் சந்தை | | 10000.00 | 1905400.00 |
| 02. பெரியகடை மரக்கறிச் சந்தை | | 10000.00 | 648500.00 |
| 03. குருநகர் சந்தை | | 10000.00 | 1058000.00 |
| 04. செங்குந்தா சந்தை | | 10000.00 | 529200.00 |
| 05. நாவாந்துறை சந்தை | | 5000.00 | 99000.00 |
| 06. பாசையூர் சந்தை | | 2500.00 | 44000.00 |
| 07. அரியாலை சந்தை | | 2500.00 | 51000.00 |
| 08. புங்கன்குளம் சந்தை | | 2500.00 | 16500.00 |
| 09. கொழும்புத்துறை சந்தை | | 1000.00 | 3300.00 |
| 10. கஸ்தூரியார் வீதியிலுள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | | 2500.00 | 55300.00 |
| 11. விளம்பர சேவைக்குத்தகை | | 5000.00 | 198300.00 |
| *இறைச்சிக்கடைகள்* | கடை இல. | | |
| 01. பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 36700.00 |
| 02. பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 04 | 2500.00 | 38300.00 |
| 03. பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 05 | 2500.00 | 26000.00 |
| 04. பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 06 | 2500.00 | 25000.00 |
| 05. பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 08 | 2500.00 | 25000.00 |
| 06. பண்ணை கருவாட்டுக்கடை | 02 | 2500.00 | 12000.00 |
| 07. பண்ணை கருவாட்டுக்கடை | 03 | 2500.00 | 20400.00 |
| 08. பண்ணை கோழிக்கடை | 07 | 2500.00 | 30250.00 |
| 09. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 37900.00 |
| 10. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 32600.00 |
| 11. அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 38000.00 |
| 12. அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 45700.00 |
| 13. நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 305000.00 |
| 14. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 282000.00 |
| 15. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 02 | 5000.00 | 172500.00 |
| 16. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 5000.00 | 193700.00 |
| 17. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 04 | 5000.00 | 122400.00 |
| 18. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 05 | 5000.00 | 166900.00 |
| 19. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 06 | 5000.00 | 201300.00 |
| 20. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | 07 | 2500.00 | 10500.00 |
| 21. புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 89100.00 |
| 22. புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 40400.00 |
| 23. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 70300.00 |
| 24. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 2500.00 | 74800.00 |
| 25. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 66000.00 |
| 26. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 53600.00 |
| 27. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 03 | 2500.00 | 24000.00 |
| 28. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 04 | 2500.00 | 10000.00 |
| 29. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 05 | 2500.00 | 10500.00 |
| 30. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 06 | 2500.00 | 6900.00 |
| 31. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 07 | 2500.00 | 10700.00 |
| 32. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 08 | 2500.00 | 6100.00 |
| 33. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 09 | 2500.00 | 6100.00 |
| 34. நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | 10 | 2500.00 | 6800.00 |
| 35. நாவாந்துறை கருவாட்டுக்கடை | 11 | 1000.00 | 3900.00 |
| 36. நாவாந்துறை கருவாட்டுக்கடை | 12 | 1000.00 | 3900.00 |
| 37. ஜின்னா வீதியில் ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 17500.00 |

*முக்கிய குறிப்பு:*

குத்தகை நிலுவைப்பணம் செலுத்த வேண்டியவர்களும் தவறுநர் பட்டியலில் உள்ளோரும் கேள்விப்படிவம் சமர்ப்பிக்க முடியாது.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.
2003.11.05. (சி-31147) (24-13-16-35-26)

# இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்கு எத்தகையது? இந்தியாதான் தீர்மானிக்க வேண்டும் என்கிறது அமெரிக்கா

- வாஷிங்ரனிலிருந்து என். பத்மசீலன் -

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவும் பங்காளி. 1980 காலப்பகுதியில் இலங்கைப் பிரச்சினை விடயத்தில் இந்தியா பெருமளவு கஷ்டங்களை அனுபவித்தது. தற்போது இலங்கை விவகாரத்தில் என்ன பங்கு வகிப்பது என்பது குறித்து இந்தியாவே தீர்மானிக்க வேண்டும்.

- இப்படி கூறியிருக்கிறார் அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்.

பத்திரிகையாளர் சந்திப்பில் ஆர்மிரேஜ் மேலும் கூறியதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடமான சந்திப்பில் நாம் பல விடயங்களைப் பேசினோம். இலங்கை பொருளாதார நிலைமை குறித்து நாம் பேசினோம். ஒக்ரோபர் 31ஆம் திகதி புலிகளால் கையளிக்கப்பட்ட இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை எனக் கூறப்படும் யோசனைகள் குறித்து நாம் நிச்சயமாகப் பேசினோம். இலங்கையின் அரசியல் நிலைமை குறித்தும் நாம் ஆராய்ந்தோம்.

பிரதமர் ரணிலை மீண்டும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். ஏறக்குறைய 20 ஆண்டுகளாகத் தொடர்ந்த மரணங்களுக்கும் அழிவுகளுக்கும் பின்னர் சமாதானத்தைக் கண்டடையும் இலங்கை அரசின் முயற்சிகளை அமெரிக்க அரசுத் தரப்பினரும் அமெரிக்க மக்களும் ஆதரிப்பார்கள் என்பதை அவர் தெளிவாக அறிந்து கொண்டிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அவரைச் சந்தித்தேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

இச்சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளும் ஆர்மிரேஜ் அளித்த பதில்களும் வருமாறு:-

*கேள்வி:* நீங்கள் குறிப்பிட்ட யோசனைகள் (புலிகளின் வரைவு) இலங்கையில் நிலைமையைச் சீராக்கும் என்று எவ்வாறு நம்புகிறீர்கள்? சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல நீங்களும் ஜனாதிபதி புஷ்ஷும் கூறியவற்றுக்கு மேலதிகமாக அமெரிக்கா செய்யக்கூடியது எதுவுமுண்டா?

*பதில்:* அரசாங்கத்தின் யோசனைகள் கையளிக்கப்பட்ட ஐந்து மாதங்களின் பின்னர் விடுதலைப் புலிகள் தமது யோசனைகளை முன்வைத்திருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் அபிலாஷைகள் முழுமையாக விவரித்துக் கூறப்பட்டதை நான் பார்த்த முதல் சம்பவம் இதுவாகும். அந்த விடயத்தில் புலிகளின் யோசனைகள் குறிப்பிடத்தக்கவை என்று நான் கருதுகிறேன்.

ஏறக்குறைய 12பக்கங்கள் கொண்ட அந்த யோசனைப்பத்திரத்தை வாசித்துப் பார்த்து - நாம் ஒஸ்லோவிலும் டோக்கியோவிலும் பேசிய சமஷ்டி, ஜனநாயக சமூகம், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், பிரதேச ஒருமைப்பாடு ஆகிய எல்லைகளுக்கு அப்பால் அது செல்கிறதா என்பது குறித்து நான் சிந்தித்தேன்.

ஆனால், நான் கூறியது போன்று - இவ்வாறான ஒரு முழுமையான விவரிப்பு மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல்தடவை என்பதால் அது குறிப்பிடத்தக்கதாகும். அது முன்னேறிச் செல்ல ஓர் அடிப்படையாக அமையலாம். ஆயினும், ஒஸ்லோவில் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்கு நாம் திரும்பி வர வேண்டும் என்பதை நான் கூறுகிறேன்.

அமெரிக்கா எவ்வாறு உதவ முடியும் என்பது கேள்வியின் இரண்டாவது பகுதியாகும். தகராறில் நாம் ஒரு தரப்பு அல்ல. ஆயினும், மனித அவலங்களுக்கு நாம் அப்பாற்பட்டவர்கள் அல்லர். டோக்கியோக் கூட்டத்தை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்த போதும், ஜப்பானிய அரசாங்கத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தையும் அமெரிக்கா ஆதரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

டோக்கியோவில் சர்வதேச சமூகமும் நிதி நிறுவனங்களும் மிகத் தெளிவான குரலில் பேசின. குறிப்பிடத்தக்க அளவு பணத்தை வழங்கத் தமது சொந்த தேசிய திறைசேரிகளை ஆழமாகக்கிண்டின. சமாதான நடைமுறைகள் ஆரம்பமாகி, சமரசப் பேச்சுக்கள் நடைபெறுகையில் வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி, முழு நாட்டிலுள்ள மக்கள் அனைவருமே நன்மையடைய முடியும்.

*கேள்வி:* வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகள் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா நீக்க இது வழி வகுக்குமா? ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு ஏதாவது பங்கு இருக்குமேயானால் அப் பங்கு என்னவாக இருக்கும்?

*பதில்:* என்ன பங்கு வகிப்பது என்பது குறித்து இந்தியாவே தீர்மானிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். தீர்வில் இந்தியாவுக்குச் சம பங்கு உண்டு. 1980ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இந்தியா பெருமளவு கஷ்டங்களை அனுபவித்தது.

வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலைப் பொறுத்தவரை அப்பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகளை அமெரிக்கா எந்த வகையிலும் நீக்காது. அப்பட்டியலிலிருந்து நீக்குவதாயின், விடுதலைப் புலிகள் சொல்லிலும், செயலிலும் பயங்கரவாதத்தையும், அப்பாவிகளுக்கு எதிரான வன்முறைகளையும் ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும்.

*கேள்வி:* கிறிஸ்டினா றொக்கா அமெரிக்க நாடாளுமன்றத்தினால் விசாரிக்கப்பட்டபோது, சிறுவர்கள் கட்டாயமாகத் திரட்டப்படுவது தொடர்வதாகக் கவலை தெரிவித்தார். அது இன்னமும் ஒரு கவலையாக உள்ளதா?

*பதில்:* நான் அறிந்தவரை சிறுவர் கட்டாய ஆள்திரட்டல் இன்னமும் தொடர்கிறது. இச்செயல் குறித்து நாம் ஏனைய அறிக்கைகளில் கண்டித்திருக்கின்றோம். இராணுவ மோதலகளுக்கு சிறுவர்கள் இழுக்கப்படுவது சமூகத்தின் மீதான ஒரு பெரும் கறையாகும்.

*கேள்வி:* விடுதலைப் புலிகளினால் ஆயுதங்கள் கடத்தப்படுகின்றன என்று இன்னமும் வெளிவரும் செய்திகள் குறித்து நீங்கள் கவலைப்படுகின்றீர்களா?

*பதில்:* ஆயுதக்கடத்தல் பற்றிய செய்திகள் குறித்து நாம் கவலை கொண்டிருக்கிறோம். ஆயுதக்கடத்தல்கள் தடுக்கப்படுவதை நாம் விரும்புகிறோம். அதைச் செய்யக்கூடிய வழிவகைகளை நாம் தொடர்ந்து ஆராய்வோம்.

*கேள்வி:* அதை நடைமுறைச் சாத்தியமாக எவ்வாறு செய்வீர்கள்?

*பதில்:* இலங்கை அரசுடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலமும் தேசிய எல்லைகளுக்கு அப்பால் ஆயுதங்கள் சட்டவிரோதமாக அனுப்பப்படுவதைத் தடுக்க ஒரே கருத்துடைய நாடுகளுடன் செயற்படுவதன் மூலமும் அதைச் செய்வோம்.

*கேள்வி:* ஈராக்கில் என்ன நடைபெறுகின்றது என்பதை விடுத்து இலங்கையின் சமாதான ஒப்பந்தத்தை முன் தள்ள நீங்கள் ஆர்வங்காட்டுவது பெரும்பாலான மக்களை வியப்படையச் செய்கிறது. இந்த ஒப்பந்தத்துக்குப் பின்னால் நீங்கள் உறுதியாக இருப்பதற்கான காரணம் என்ன?

*பதில்:* இலங்கைப் பிரச்சினை அத்தீவை 20ஆண்டுகளாக வாட்டி வதைத்து வருகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, ஜனாதிபதி குமாரதுங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானத் தேடல் - பிரதமர் ரணிலினால் தொடரப்படும் சமாதானத் தேடல் - சமாதான ஒப்பந்தத்தின் பின்னால் சமூகத்தை ஒன்றுபடுத்தச் செய்யும் உண்மையான சாத்தியம் உள்ளதென நாம் கருதுகிறோம். மோதலினாலும் வன்முறையாலும் களைப்படைந்திருக்கும் விடுதலைப் புலிகள் இப்போது சமாதான ஒப்பந்தத்துடன் ஒத்துழைக்கின்றனர். சமாதானப் பேச்சுகளுக்கு ஒரு வாய்ப்பளிக்கப் போகிறார்கள்.

20ஆண்டுகளாக ஏதோ ஒரு வழியில் துயரப்பட்ட 2கோடி மக்களை அதிலிருந்து விடுவிக்கும் சாத்தியம் இருக்குமேயானால் அதில் நாம் சம்பந்தப்படுவோம். நோர்வே அனுசரணையாளர்களின் முயற்சிகளுக்கு ஒரு பக்கமாக அதில் சம்பந்தப்படுவதில் நாம் பெருமையடைகிறோம்.

*கேள்வி:* இலங்கையில் உங்களுக்குள்ள கேந்திர முக்கியத்துவ நலன் என்ன?

*பதில்:* எந்த ஓர் இடத்திலாவது வன்முறையும் போராட்டமும் இருக்குமேயானால் அவை ஏனைய இடங்களுக்கும் பரவலாம் என்பதே எமது கேந்திர முக்கியத்துவ நலன் என்று நான் கருதுகிறேன். எனவே, அது தொடர்பாக எமக்குக் கேந்திர முக்கியத்துவ நலன் உண்டு.

ஆனால், இலங்கையின் அபிவிருத்தி எமது அபரிமிதமான நலனாகும். தெற்கு ஆசியாவில் மட்டுமன்றி, முழு உலகிலும் பொருளாதாரத்தில் இலங்கை ஒரு முழுப் பங்காளியாக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

*கேள்வி:* ஈராக்கில் எந்த ஓர் உதவியையாவது இலங்கை அரசு வழங்கியதா?

இம்முறை அது குறித்து நாம் பேசவில்லை. குறிப்பாக இலங்கைப் பிரதமருடன் பேசவில்லை.

- இவ்வாறு ஆர்மிரேஜ் பதிலளித்திருக்கிறார். (ம)

## வாஷிங்ரன் நிகழ்வுகளில் பிரதமர் ரணில்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின மூன்று நாள் அமெரிக்க விஜயத்தின முதல் நாள் நிகழ்வுகள் அமெரிக்க நேரப்படி திங்கட்கிழமை காலை ஆரம்பமாகின.

பிரதமரும் அவர் தலைமையிலான குழுவினரும் காலை 7.25 மணிக்கு வாஷிங்ரன் றிட்ஜ் கால்டன் ஹோட்டலில் இருந்து மேரி லான்டில் உள்ள றொக்வில் பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவுக்கு விஜயம் செய்தனர்.

பிரதமருடன் அமைச்சர் மிலிந்த மொறகொட, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னாட் குணதிலக, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்ஹா ஆகியோரும் வருகை தந்திருந்தனர். உயிரியல் தொழில்நுட்பம் குறித்து பிரதமருக்கு அங்குள்ள நிபுணத்துவ அதிகாரிகளினால் விளக்கம் அளிக்கப்பட்டது.

பிரதமர் அங்கு பேசுகையில், கடந்த இருபது வருடகால யுத்தத்தினால் அழிந்துபோய் உள்ள இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் உயிரியல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்று கூறினார்.

இதன்பின்பு, உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் பிரதமர் விஜயம் செய்தார். (Bio-Tech Industry) அங்கு கடமையாற்றும் நிபுணர்கள் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து பிரதமருக்கு விளக்கம் அளித்தனர்.

பிரதமரின் இந்த விஜயத்துக்கான அனுசரணையை மேரிலான்ட் காங்கிரஸ் உறுப்பினர் கிறிஸ்டோபர் வன் கொபண்ட் அங்கு வழங்கி இருந்தார்.

கிறிஸ்டோபர் வன்கொபண்ட் அங்கு உரை நிகழ்த்துகையில் -

இலங்கையின் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என்று தெரிவித்தார். இலங்கையில் தாம் கல்வி கற்றதாகவும் தனது தந்தையார் இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக ஒரு சமயம் கடமையாற்றி இருந்தார் என்றும் அவர் கூறினர்.

இதன் பின்னர், பிரதமர் தலைமையிலான குழுவினர் வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு விஜயம் செய்தனர். பிற்பகல் 1.30 மணியளவில் அமெரிக்க ராஜாங்க உதவிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜுடனான சந்திப்பு இடம்பெற்றது. (ம)

## வீட்டிலிருந்த நகைகள் மாயம்; ரி.வி.பார்க்கப்போன சிறுமி கைது!

வலி.வடக்கு,நவ.6

சுதுமலைப்பகுதியில் உள்ள வீடொன்றில் நகைகள் காணாமற் போனமை தொடர்பாக, சம்பவ தினத்தில் அங்கு தொலைக்காட்சி பார்க்கச் சென்ற சிறுமி கைது செய்யப்பட்டார்.

கடந்த 20 ஆம் திகதி மானிப்பாய், சுதுமலைப்பகுதியில் உள்ள வீடொன்றில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான நகைகள் காணாமற் போயிருந்தன. இது தொடர்பாக வீட்டு உரிமையாளர் மானிப்பாய் பொலீஸில் முறையிட்டிருந்தார். இம் முறைப்பாடு குறித்து விசாரணை நடத்திய பொலீஸார் மேற்படி வீட்டின் அயலில் வசிக்கும் 11 வயது சிறுமி ஒருவரை கைதுசெய்தனர்.

அச்சிறுமி கடந்த திங்கட்கிழமை மல்லாகம் மாவட்டப் பதில் நீதிவான் எஸ். வசந்தசேனன் முன்னிலையில் ஆஜர் செய்ய

இது குறித்த விசாரணையின் போது அச்சிறுமியுடன் பதில் நீதிவானும் நீதிமன்ற முதலியாரும் தனிமையில் பேசினார்கள்.

குறிப்பிட்ட வீட்டிற்கு தொலைக்காட்சி பார்க்கச் சென்ற தான் தெருவில் ... வீட்டில் இருந்த பெண்மணி கொதிதண்ணீர் தயாரிக்க சமையலறைக்கு சென்றதாகவும், அவ்வேளையில் தான் பொருள்களை அபகரித்ததாகவும், மேற்படி சிறுமி கூறியுள்ளதாக தெரியவருகிறது.

அபகரித்த நகைகளில் ஒரு பகுதியைக் கொடுத்து தின்பண்டங்கள் வாங்கி சாப்பிட்டு விட்டதாகவும் -

மற்றையவற்றை தன்னுடன் பாடசாலையில் படிக்கும் சகமாணவி ஒருவரிடம் வைத்திருக்கும்படி கொடுத்துள்ளதாகவும் -

அச்சிறுமி தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. இதேசமயம் அச்சிறுமியின் வீட்டிலிருந்து இரு சங்கிலிகளையும், 2ஜோடி தோடுகளையும் பொலீஸார் மீட்டுள்ளனர்.

விசாரணையை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை ஒத்திவைத்த பதில நீதிவான் அதுவரை குற்றஞ்சாட்டப்பட்ட சிறுமியை இட்சன் சேனை இல்லத்தில் தங்கவைக்கும்படி உத்தரவிட்டார். அத்துடன் நகைகளை வைத்திருக்கும்படி கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சக மாணவியை நீதிமன்றில் ஆஜர் செய்யும்படியும் பொலீஸாரை பதில் நீதிவான் பணித்துள்ளார். (ஓ-86)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,நவ.6

ஐப்பசி வெள்ளிக்கிழமையையொட்டி நாளைய தினம் நல்லூர் அறுபத்துமூன்று நாயனார் குருபூசை மடத்தில் காலை 6.30 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. நண்பகல் அன்னதானமும் இடம்பெறவுள்ளது. (ம-10)

## தாலிக்கொடி அறுப்பு

தென்மராட்சி,நவ.6

வீட்டிலிருந்த பெண்ணை அழைத்த நபர் ஒருவர் அப்பெண்ணின் கழுத்திலிருந்த 9 பவுண் நிறையுடைய தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் இடம்பெற்றது.

அண்மையில் இந்தியாவிலிருந்து வந்த குறிப்பிட்ட பெண் தனது சகோதரி வீட்டுக்கு வந்திருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய மூவருக்கு அபராதம்

தென்மராட்சி,நவ.6

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற லொறி வரணிப் பகுதியில் வைத்து கொடிகாமம் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

லொறியில் மணல் ஏற்றிச் சென்ற கணபதிப்பிள்ளை தவராஜஜோதி, செல்வநாயகம் கணபதிப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை சந்திரபாபு ஆகியோர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த மூவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் பாலசுப்பிரமணியம் மணலை கைதடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு வழங்குமாறு உத்தரவிட்டார். (ம-17)

## ஆனந்தசங்கரிக்கு சந்திரநேரு சூடு!

காரைதீவு,நவ.6

நான் கூட்டணி உறுப்பினன் அல்லன் என்று பேட்டி கொடுத்தார் சங்கரி. அவர் கூட்டணி நாமம் உச்சரிக்கத் தொடங்க முன்பு 14 வயதில் தமிழர் போராட்டத்தில் ஈடுபட்டவன் நான். கூட்டணி என்ற பெயரை முன்மொழிந்தவரே எனது தந்தையார் அறப்போர் அரியநாயகம் தான்.

- இவ்வாறு திருக்கோவில் பிரதேச துரித அபிவிருத்தித் திட்டக் கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்தார். திருக்கோவில் பிரதேச செயலகத்தில் திங்களன்று பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-


விடுதலைப் புலிகள் ஏகபிரதிநிதிகள் அல்லர் என்று சங்கரி அன்று கூறியபோது தவறுதலாக கூறிவிட்டாரோ என்று தோன்றியது. ஆனால், இன்று அவர் கூறிவரும் கருத்துக்கள் யாவும் அவரொரு மூளைக்கோளாறு உள்ளவர் என்பதைத் தெட்டத்தெளிவாக நிரூபித்து வருகிறது. அப்படிப்பட்டவர்கள் தலைவராயிருக்கலாயக்கற்றவர்கள்.

நான் பரம்பரைக் கூட்டணிக்காரன். எனது உறுப்புரிமை தெரியாதவர் எப்படி தலைவராயிருக்க முடியும்? விடுதலைப் புலிகளின் நாமத்தில் வாக்குப்பெற்று வென்றுவிட்டு இன்று தனித்துவம் என்று பேசிப் பித்தலாட்டம் பண்ணுகிறார் அவர். உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## சாயி சிந்தனை

### ஆனந்தம் வெளியில் இல்லை



மனிதர்கள் பல வகையில் ஆனந்தமாக இருக்க முயற்சி செய்கிறார்கள். இவையெல்லாம் அஞ்ஞானத்துடன் செய்யும் பிரயத்தனங்களே! உன்னைத் தாண்டி ஆனந்தம் எங்கும் வெளியில் இல்லை. நீயே ஆனந்தஸ்வரூபம் இந்த உண்மையை மறந்து, எங்கோ ஆனந்தத்தை வெளியிலே இருப்பதாக எண்ணி முயற்சிப்பது வெறும் அறிவற்ற செயல். எதையோ ஆனந்தமாக எண்ணினால் அது வெறும் பிரமையே! பிரமையே உங்களை ஆட்டுவிக்கிறது. இது இருக்கும் வரை பிரம்மம் கண்ணுக்குத் தெரிவதில்லை. பிரமையை விரட்டினால் பிரம்மம் உமக்கு சாட்சாத்காரமாக விளங்கும்.

இந்த பிரமைக்கு தேகமே மூலகாரணம். தேக அபிமானமே பிரமத்தை உன்னிடமிருந்து தள்ளி வைக்கிறது. நீ பிறக்கிறாய்! வளர்கிறாய்! படிக்கிறாய்! திருமணம் செய்து கொள்கிறாய்! திருமணத்திற்கு முன் நீ யார்? உன் துணை யார்? இவையனைத்தும் இடையே வந்த ஓடும் மேகங்களே. இவை ஆனந்தத்தைத் தரக்கூடியவையல்ல. நீ பிறக்க முன்பும் பிறந்த பின்பும் - பின்னர் இறந்த பின்பும் இருக்க கூடியது ஆனந்தம். இது திரிபால பாக்கியம். இதுவே நிறைந்திருக்கக்கூடிய சத்தியம். இறைவன் நீ பிறப்பதற்கு முன்பும் இருந்தார். உன்னுள்ளும் இருக்கின்றார். நீ இறந்த பின்பும் இருப்பார். எங்கும் நிறைந்திருக்கும் சத்தியம் அவரே!

அந்த மாறாத சத்தியத்தை புரிந்துகொள்ளவேண்டும்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

# அகமகிழ பாராட்டி வாழ்த்துகிறோம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்,
மாசேரி, வரணியை
வதிவிடமாகவும் கொண்டவராகிய

## திரு. கந்தையா இராசேந்திரம்

அவர்கள் 15.09.2003 அன்று
யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக
யாழ். மாவட்ட நீதிமன்றில்
நீதிபதி பா.சுப்பிரமணியம் அவர்களின்
முன்னிலையில் சத்தியப்பிரமாணம்
செய்துகொண்டார்.
அவரை அகம்மகிழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.
புகழ்பூத்த குடும்பத்தைச் சேர்ந்த இவர்,
ஓய்வுபெற்ற நிலஅளவையாளரும்
சமூகசேவையில் சிறந்த ஈடுபாடும் மும்மொழியிலும் சிறப்பாற்றல் கொண்டும் விளங்குகின்றார். இத்தகைய பெருமகனுக்குக் கிடைத்த பட்டம் சமூகத்திற்கும் எமது மக்களுக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதி, அவருடைய பணி நீண்டு சிறக்க நாவலடியான் பாதம் பணிந்து வாழ்த்துகிறோம்.

### அகமகிழ வாழ்த்தும் நெஞ்சங்கள்:

க.கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.ச. பச்சிலைப்பள்ளி)
சி.சச்சிதானந்தம் (கிராம அலுவலர் தரம் - I)
மு. நடராசா (உபஅஞ்சலதிபர், வரணி)
வெ.குமாரகுலசிங்கம் (அஞ்சலர்)
க.ஆறுமுகம் (மாசேரி)
L.O.குடும்பம் சார்பில்
திருமதி தயாளன் சுதர்சினி
(L.L.B - Attorney at Law.)
7) சு.சிதம்பரநாதன் (கரம்பைக்குறிச்சி) (C/31134) (26-13-15-25)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

## சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் - 2004

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 2003.11.20 நண்பகல் 12.00 மணிவரை.
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2003.11.21 முற்பகல் 10.30 மணிவரை.
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 2003.11.21 முற்பகல் 11.00 மணி.
04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 20% சேர்த்து அறவிடப்படும்.
05. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **நெல்லியடி உபஅலுவலகம்** | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச்சந்தை | 1,210,000/- | 20,000/- | 1,000/- |
| 02. நெல்லியடி மீன்சந்தை | 88,000/- | 2,000/- | 250/- |
| 03. கோவிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 16,600/- | 3,500/- | 250/- |
| 04. கொட்டடிச் சந்தை | 2,300/- | 500/- | 250/- |
| 05. நெல்லியடி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 203,500/- | 10,000/- | 250/- |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 36,300/- | 500/- | 250/- |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.2 | 42,000/- | 500/- | 250/- |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.3 | 34,100/- | 500/- | 250/- |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை | 286,000/- | 3,000/- | 250/- |
| 10. கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 16,500/- | 500/- | 250/- |
| 11. கோவிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 110,000/- | 3,000/- | 250/- |
| 12. கொட்டடிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 30,800/- | 500/- | 250/- |
| 13. நெல்லியடி பழைய சந்தை | 75,000/- | 3,000/- | 250/- |
| **உடுப்பிட்டி உபஅலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 385,000/- | 5,000/- | 250/- |
| 15. அந்திரான் சந்தை | 11,600/- | 500/- | 250/- |
| 16. உடுப்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 250,000/- | 2,000/- | 250/- |
| 17. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 4,500/- | 500/- | 250/- |
| 18. நவிண்டில் சந்தை | 6,600/- | 500/- | 250/- |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 75,000/- | 3,000/- | 250/- |
| 20. உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 56,000/- | 500/- | 250/- |
| **கட்டைவேலி உபஅலுவலகம்** | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 600/- | 500/- | 250/- |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 29,150/- | 500/- | 250/- |
| 23. அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 19,900/- | 500/- | 250/- |

**திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி,**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
(C/31141) (26-13-15-25)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்!
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-2..
யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567
(குறிப்பு:சத்திரச்சந்திக்கு அண்மையில்)
(சி-30457)

# முதலாம் வருட நினைவலைகள்

மண்ணில் 10 - 11 - 1937



விண்ணில் 18 - 10 - 2002

## திருமதி சேதுராமலிங்கம் திலகவதியம்மா

(கலைப்பனாவத்தை, தும்பளை, பருத்தித்துறை)
திதி: பூர்வபக்க திரயோதசி 06-11-2003
அன்பின் இலக்கனமாய் பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் பாரினில் வாழ்ந்தீர்கள் அம்மா!
தினம் தினம் நினைவில் நீங்காத நினைவுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள், உறவினர்கள்.
தற்காலிக முகவரி:
வியாபாரிமூலை,
பருத்தித்துறை. (23966) (26-13-15-25)

# நான்காம் ஆண்டில் மறையாத நினைவலைகள்

மண்ணில் 19.09.1915



விண்ணில் 22.10.1999

## அமரர் ஞானப்பிரகாசம் செல்லத்துரை

திதி: பூர்வபக்க திரயோதசி 06.11.2003
ஆண்டுகள் நான்கு சென்றுவிட்டதே நீங்கள்
ஆண்டவன் அடிசேர்ந்து
பண்பாய் எம்மை வளர்த்து பக்குவமாய் ஆளாக்கி
பாசத்தோடு அன்பைப் பகிர்ந்து
தரணியிலே எம்மை தலைநிமிர்ந்து வாழவைத்து
பாசமாய் எமைவளர்த்து பறந்து சென்றதெங்கே?
ஆலய நிழல்போல் ஆதரித்த தெய்வமெங்கே?
காலன் தங்களைக் கவர்ந்து சென்றாலும்
காலம் உள்ளவரை எம்நெஞ்சில் நிலைத்திருப்பீர்கள்!

பிரிவினால் துயருறும்:
அன்பு மனைவி, பாசமகள்,
மருமகன், பேரர் (கனடா),
சகோதரி, உற்றார், உறவினர்.
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (24319) (33-13-15-25)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 08 - 1964



உதிர்வு 06 - 11 - 2002

## அமரர் கனகரட்ணம் சோதிராஜா (சோதி)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
பண்பிலே தெய்வமாய்
பாசத்தின் திருவுருவாய்
பாரினிலே வாழ்ந்தவரே!
எமக்கு அன்பூட்டி அறிவூட்டி
ஆதரவு காட்டி வழிநடத்தினீரே!
கண்ணாக எமைப் பேணிக்
கருத்தோடு வளர்த்தவரே!
பாரினிலே பல சிறப்பும் பெற்று
நாம் வாழ்வதற்கு வழி செய்தவரே!
என்றென்றும் உம் நினைவே
இதயத்தில் இருக்குதையா!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறிடுமோ எம் துயரம்!
ஆண்டு நூறு போனாலும்
அறுந்திடுமோ உம் நினைவு!
இறைவனின் அடியினில் நீர்
இனிதாக வாழ்ந்திடவே
இரவு பகலாக இறைஞ்சுகிறோம் நாமெல்லாம்!

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மாமி,
மச்சான்மார், மச்சாள்மார்.
ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (24375)(35-13-15-25)

# ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கை இக்காலகட்டத்தில் துரதிர்ஷ்டமானது!

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை அதுவும் இந்தக் காலகட்டத்தில் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. வேறு அடிப்படையில் இதனைச் செய்திருக்கலாம். இதற்கு அடுத்தகட்டமாக என்ன நடக்கப்போகின்றது என்றுதான் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

- இப்படிக் கூறியிருக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில் - முஸ்லிம்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் எந்தத் தருணத்திலும் ஒரு தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

அந்தத் தேர்தல் எங்களுக்கான மக்கள் ஆணையைப் புதுப்பித்துக் கொள்வதற்கும், முஸ்லிம்களுக்கான அதிகார அலகை வலியுறுத்தவும், அதற்கு மீண்டும் முஸ்லிம்களுடைய ஏகோபித்த மக்களாணையைப் பெறுவதற்கும் சந்தர்ப்பமாக அமையும் என்றார்.

அமைச்சரின் பதில்கள் வருமாறு:-

*கேள்வி:* இந்த முடிவு இந்தக் காலகட்டத்தில் எடுக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமானது என்றால் வேறொரு காலகட்டத்தில் எடுத்திருக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

*பதில்:* ஜனாதிபதியின் நடவடிக்கையை நான் நியாயப்படுத்தவில்லை. இதற்கு எதிராக இருக்கின்ற மாற்றுவழி ஒன்றுதான்.

ஜனாதிபதிக்கெதிராக ஒரு குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானோர் கொண்டுவருவது. அதனூடாக நாடாளுமன்றம் கலைக்கப்படுவதைத் தடுக்கலாம்.

தற்போதைய நடவடிக்கை மூலம் நாட்டு மக்களின் அதிருப்தியை ஜனாதிபதி சம்பாதித்திருக்கிறார் என்ற உணர்வு அரச தரப்பு எம்பிக்கள் மத்தியில் நிலவுகிறது.

ஜனாதிபதியைப் பதவியிறக்கம் செய்வதற்கான உடனடி நடவடிக்கைகள் எவையும் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆரம்பகட்டமாகப் பிரதம நீதியரசருக்கு எதிரான ஒரு பிரேரணையை அரசுத் தரப்பினர் முன்மொழிந்துள்ளார்கள். அது சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருந்திருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதி தற்போது எடுத்திருக்கும் நடவடிக்கை மூலம் தனக்கெதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை அவர் தடுத்திருக்கிறார் என்று கூறமுடியாது.

*கேள்வி:* இந்த அரசியல் நெருக்கடி மூலம் உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது என நினைக்கின்றீர்களா?

*பதில்:* நிச்சயமாக, முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் எங்களுடைய பேரம் பேசும் சக்தி கூடுகின்றது.

நாங்கள் இதர கட்சிகளுடனும் இது சம்பந்தமாகப் பேசுவோம். பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவியான ஜனாதிபதி, முஸ்லிம்களின் நிலைப்பாடுகள் சம்பந்தமாக என்ன அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளார் என்பதையும் நாம் அறிய விரும்புவோம்.

பேச்சு மீள ஆரம்பிக்கப்படும்போது மூன்றாம் தரப்பு என்ற அந்தஸ்து எங்களுக்குத் தரப்படும் என அரசு வாக்குறுதி அளித்துள்ளது. அதன்படி அந்த அந்தஸ்து எங்களுக்குத் தரப்பட்டால் மட்டுமே அரசு பேச்சில் கலந்துகொள்ளவேண்டும் என்ற நிபந்தனையும் முக்கியமானது.

- இப்படி அவர் கூறினார்.

## சாரதாதேவி உருவப்படம் திரை நீக்கம்

தென்மராட்சி,நவ.6

வரணி மகா வித்தியாலயத்தில் அன்னை சாரதாதேவியின் உருவப்படம் அண்மையில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார். அத்துடன், பாடசாலைக்கு சமயநெறி நூல்களையும் வழங்கினார்.

(ம-10-117)

# ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் தமிழர்களுக்கு எதிரான துரோகம்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கண்டனம்

கொழும்பு,நவ.6

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் வரைவைச் சமர்ப்பித்து 72 மணி நேரத்தில் ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற செயலானது, திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட துரோகச் செயலாகவே கருதுகிறேன்.

- இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 20 வருடகால யுத்தத்தின் கொடூரம் தணிந்து, சமாதான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும் நேரத்தில் ஜனாதிபதி எடுத்துள்ள இந்த முடிவை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இருபது மாதகாலமாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் இருக்கின்றது. தமிழ்மக்கள் மட்டுமல்ல, ஏனைய மக்களும் அமைதியான வாழ்க்கை மேற்கொண்டிருக்கும் இன்றைய சமாதானச் சூழலைக் குழப்பும் வகையில் ஜனாதிபதியின் நடவடிக்கை அமைந்துள்ளது.

பால் பொங்கிவரும் நேரத்தில் பானையை உடைத்த கதையைப் போல அமைந்துள்ளது ஜனாதிபதியின் செயல் - என்றார் அவர்.

## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில கோவிந் நிஹலானியின் நெறியாள்கையில் உருவான "பார்ட்டி" (விருந்து) என்னும் ஹிந்தித் திரைப்படம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் தமிழ் உபதலைப்புக்களுடன் காண்பிக்கப்படும். (ம)

## அமெரிக்கா - இலங்கை இடையே நிபுணர்கள் பரிமாற்றத் திட்டம்

கொழும்பு,நவ.6

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நிபுணாகள் பரிமாற்றத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட விருப்பதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு, பொறியியல், வைத்தியம் உட்பட 35 துறைகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக குறிப்பிடப்பட்ட துறைகளில் தகுதியுடைய 32 அமெரிக்க நிபுணர்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்தமாதம் முதல் இந்த நிபுணர்கள் பரிமாற்றத் திட்டம் நடைமுறைக்கு வரும் என தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-9)

# கோழி பிடிக்க கூரை ஏறிய சிறுவன் கீழேவீழ்ந்து காயம்!

தென்மராட்சி,நவ.6

வீட்டுக் கூரையில் படுத்திருந்த கோழியைப் பிடிப்பதற்காகக் கூரை மீது ஏறிய சிறுவன் ஓடு உடைந்ததால் நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தான். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பளை, புலோப்பளை கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பிலோமினாராசா ஜென்சன் (வயது 13) என்ற சிறுவனே இச்சம்பவத்தில் காயமடைந்தான். காயமடைந்த இச்சிறுவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

(ஓ-117)

# பாம்புக்கடிக்கு இருவர் இலக்கு

தென்மராட்சி,நவ.6

வீதியில் ஊர்ந்த பாம்பினைப் பிடித்த மூன்று வயதுச் சிறுவன் அப்பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகராசா சாரங்கன் (வயது 3) என்னும் சிறுவனே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

அதே தினத்தில் விறகு தறிக்கச் சென்ற ஒருவர் புடையன் பாம்பினால் கடியுண்ட சம்பவம் பளை, தர்மக்கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா தம்பித்துரை (வயது 28) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார். (ஓ-117)

# முதியோர்கள் இந்த நாட்டின் வளம்....

லிங்கம்

மனிதவர்க்கம் வெகு வேகமாக முதிர்ச்சிநிலை அடைந்து வருகின்றது. இது உலகளாவிய ரீதியிலான ஒரு விடயம். ஒவ்வொரு மாதமும் உலகில் சுமார் பத்து லட்சம் பேர் 60 வயதினைத் தாண்டுகின்றனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.



மனிதனின் வயதெல்லை 1950 ஆம் ஆண்டிலிருந்து 20 வருடங்களால் உயர்ந்துள்ளதாகவும், அதே வயதெல்லை இன்னும் அரைநூற்றாண்டு காலப்பகுதிக்குள் மேலும் பத்து வருடங்களால் உயரும் எனவும், 2000 ஆம் ஆண்டில் 600 மில்லியனாக இருந்த வயோதிபரின் எண்ணிக்கை விஞ்ஞான ரீதியிலான மக்கள் தொகையியலின்படி 2050 ஆம் ஆண்டளவில் 2000 மில்லியனாக உயரலாம் எனவும், இவ்வாறான உயர்வு குறிப்பாக வளர்முக நாடுகளிலேயே ஏற்படுமெனவும் அக்கணிப்பீடு மேலும் தெரிவிக்கின்றது.

இலங்கையும் ஒரு வளர்முக நாடு என்ற வகையில் இங்கும் விஞ்ஞான ரீதியில் பல முன்னேற்றங்கள் இடம்பெறுகின்றன. அதற்கமைய குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்துள்ளது. கருத்தடைகள் அதிகளவில் நடைபெறுகின்றன. பலவிதமான கொடிய நோய்கள்கூட தற்போது கூடுதலாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் 2025 ஆம் ஆண்டளவில், ஆசியாவிலேயே வயோதிபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், இலங்கை மூன்றாம் இடத்தை வகிக்கும். அதன்படி உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை மக்கள் மிக வேகமாக முதிர்ச்சியடைந்து வருகின்றனர் என்று இத்துறை சார்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர்.

எனவே, இலங்கையைப் பொறுத்தவரையில் எமது மக்கள் முதிர்ச்சியடையும் வேகம் கட்டுப்படுத்தப்பட வேண்டியதென்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒருவிடயம். அதற்கு அரசின் தலையீடு மட்டும் போதுமானதல்ல. அரச சார்பற்ற நிறுவனங்களும் பொது மக்களும் இந்த விடயத்தில் ஈடுபட வேண்டும்.

இதனைக் கருத்திற்கொண்டு இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைச்சார்ந்த அமைப்பு ஒன்று 1999 இல் உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டிலேயே இலங்கையும், சர்வதேச நாடுகளின் வரிசையில் தன்னையும் ஈடுபடுத்தி 'முதியோர் தினம்' அனுஷ்டிக்க ஆரம்பித்தது.

முதியோர்களின் அறிவாற்றல், பழுத்த அனுபவம் நாட்டின் வளமாகின்றது. அதற்கமைய முதியோர்கள் மீதான கரிசனை தற்போது பெருமளவில் முன்னெடுக்கப்படுகின்றது. அவர்களின் பாதுகாப்பு, நலன் பேணுதல் போன்ற செயற்பாடுகள், அந்த அமைப்பினால் ஆரம்பிக்கப்படுகின்றன. அதன் முன்னோடிச் செயற்பாட்டின் பயனாக 'NFOA'-'Non Govetnmental Organization Forum on Ageing' என்ற பெயரில் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம் பின்னர் சமூக சேவைகள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டது.

எமது நாட்டில் சுமார் 80 சத வீதமான மக்கள் கிராமப் புறங்களிலேயே வசிக்கின்றனர். அவர்களிலும் அநேகர் வறியோர்கள். வறிய குடும்பங்களிலுள்ள முதியோர்களைச் சீரிய முறையில் கவனிப்பதென்பது சிரமமான விடயமாகின்றது. காரணம் அக்குடும்பங்களில் நிலவும் வறுமையே.

## வயது ஒரு பிரச்சினையே இல்லை

அடுத்ததாக, எமது நாட்டைப் பொறுத்தவரையிலான இன்னொரு விடயமும் முக்கியமானது. எமது நாட்டுச் சனத்தொகையில் 52 சதவீதமானோர் பெண்கள். எனவே, முதிர்ச்சியடையும் விகிதாசாரத்தில் பெண்களே ஆண்களைவிடக் கூடுதலாயிருக்கின்றனர். அத்தோடு, பெண்களின் சராசரி ஆயுள்காலம் 76 வருடங்களாக இருக்கும்போது ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 72 வருடங்கள்தான். இந்த விகிதாசாரமும் 2025 ஆம் ஆண்டளவில் முறையே 80 ஆகவும், 75 ஆகவும் உயரும் என்பதும் விஞ்ஞான ரீதியிலான ஒரு கணிப்பீடு.

மேலும் கலாசாரத்தின்படி பெண்கள் தமது வயதிலும் பார்க்க சற்று வயதுகூடிய ஆண்களைத் திருமணம் செய்வது நடைமுறை. அத்தோடு, பொதுவாகவே ஆண்களின் ஆயுள் காலத்தோடு ஒப்பிடும்போது பெண்களின் ஆயுள்காலம் கூடியதாகவுள்ளது என்பதாலும் அதிக எண்ணிக்கையிலான பெண்கள் விதவைகளாகின்ற நியதியும் ஏற்படுகின்றது.

என்.எவ.ஓ.ஏ. நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிப் பார்க்கும்போது, அந்த நிறுவனம் போதிய நிதிவளம் இல்லாத காரணத்தால், தனது செயற்றிட்டங்களை முறைப்படி முன்னெடுப்பதற்கு முடியாத நிலையிலுள்ளது

எனினும் முதிர்ச்சிவேகம், முதிர்ச்சியடையும் விகிதாசாரம், முதிர்ச்சி நிலை சம்பந்தமாக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இந்த நிறுவனம் தற்போது மேற்கொண்டு வருகின்றது. அதன் பயனாக முதியோருக்கு சமூகத்தில் சில பொதுவான மனிதாபிமான வசதிகளையும், சௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கமாக, 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குசமூக சேவைகள் திணைக்களம்மூலம் 'சிரேஷ்ட குடிமகன் அட்டை' (Senior Citizen Card) என்ற அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

உதாரணமாக பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல், குறைந்த கட்டணம் அறவிடுதல், மருந்துவகைகள் போன்ற தமக்கான பொருள்களை கடைகளில், சந்தைகளில் கொள்வனவு செய்யும்போது முடிந்தளவில் விலைச்சலுகைகள் போன்ற சிலவற்றைக் கூறலாம்.

அடுத்ததாக, அவர்களது நாளாந்த சௌகரியமான வாழ்க்கை செதிகளைப் பொறுத்தவரையில், முதியோர்கள் தமது பிள்ளைகளில் அல்லது சுற்றத்தாரில் தங்கியிருப்பதென்பது உலகம் பூராகவும் நடைமுறையிலுள்ளதும், ஏற்புடையதுமான ஒன்று.

அநேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் முதியோர்களைக் கவனிப்பதற்கென பல பொதுநிறுவனங்கள் உள்ளன. ஆனால், இலங்கையில் அது மிகக்குறைவு. அத்தோடு, அநேகமான முதியோர்கள் தமது வீடுகளில் சிறுவர்களைக் கவனித்தல், குறிப்பாகப் பெண்கள் குழந்தைகளைக் கவனித்தல் மற்றும் வீட்டுப் பொறுப்புக்களையும் ஓரளவிற்கு கவனிக்கவேண்டிய நிலையிலுள்ளனர். ஏனெனில், பல வீடுகளில் கணவன் - மனைவி இருவருமே தமது தொழில்கள் காரணமாக வெளிச்செல்வதனாலும், சில வீடுகளில், குறிப்பாக வறுமையடைந்த குடும்பங்களில், குடும்பப் பெண்கள் மத்திய கிழக்குப் போன்ற வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் சென்றுவிடுவதாலும் சிறுவர்களைக் கவனித்தல், வீட்டுப் பொறுப்பினை ஓரளவிற்கேனும் ஏற்றுக்கொள்ளுதல் போன்ற பணிகள் அவர்களுக்கு தவிர்க்கமுடியாததாகின்றது. மேலும் சில வசதியான குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்வதனாலும் முதியோர்களைக் கவனித்தல் அக்குடும்பங்களில் குறைந்து விடுகின்றது.

முதியோர்கள் அனுபவமுதிர்ச்சியும், பழுத்த அறிவாற்றலும் உள்ளவர்கள் என்பது வெள்ளிடைமலை. அதனால், அவர்கள் நாட்டின் வளங்களுள் ஒன்று என்றால் அதனை மறுப்பதற்கில்லை. மனிதாபிமான நோக்கிலும் முதியோர்களைக் கவனிப்பதற்காகவும் 'NFOA' நிறுவனத்தில் இலங்கைப் பெண்கள் சாரணர் சங்கமும் இணைந்து, அதனூடாக தற்போது பெண் சாரணர்கள் அர்ப்பணிப்புடன் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். மேற்படி அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த விடயத்தினை விரிவாக்கும் நோக்கில், பங்களிப்பு வழங்க விரும்பும் பொதுப் பணி மன்றங்கள் மற்றும் தனிநபர்களைத் தம்முடன் இணைத்துக்கொள்ள விரும்புகிறது. *

## கமக்காரர் அமைப்பிற்கு வலுவூட்டல் பயிற்சி

வலிகாமம் தெற்கு,நவ.6

உடுவில் கமநல சேவை நிலையத்தில் கமக்காரர் அமைப்பிற்கான வலுவூட்டல் பயிற்சி வகுப்பொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கமநல சேவைநிலைய மாநாட்டு மண்டபத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதன் தலைமையில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

விவசாயம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வங்கி தொடர்பான விடயங்களில் அத்துறைசார் அதிகாரிகள் பங்குபற்றி பயனுள்ள தகவல்களை இப்பயிற்சியின்போது வழங்கவுள்ளனர்.

உடுவில் கமநல சேவைநிலையத்துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களில் இருந்து 30 அங்கத்தவர்கள் இப்பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-152)

## வர்த்தக பயிற்சிநெறி

வட்டுக்கோட்டை,நவ.6

வர்த்தகத்தில் ஈடுபடவிரும்புவோருக்கான பயிற்சிநெறி ஒன்று சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடத்தப்படும். அதன் முடிவில் வங்கிகளில் கடன் உதவி பெறுவதற்கான திட்ட அறிக்கையும் தயாரிக்க உதவப்படவுள்ளது. இப்பயிற்சியில் ஈடுபடவிரும்புவோர் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-151)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீட சித்திரமும் வடிவமைப்பும் பிரிவின் முதலாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரி நடேசர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பரீட்சை தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் - அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு - முதலாம் வருட மாணவர் பிரதிநிதி கேட்டுள்ளார். (ஒ-9)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,நவ.6

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்த்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுழிபுரம் அம்மன் வில்லிசைக் குழுவினரால் 'குறவனை மணந்த குறத்தி' என்ற தலைப்பில் வில்லிசை நிகழ்வு இடம்பெறும். அறிமுகவுரையை பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் நிகழ்த்துவார். (ம-173)

## மனைப்பொருளியல் பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி,நவ.6

தென்மராட்சிப் பிரதேச யுவதிகளுக்கான மனைப் பொருளியல் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி பிரிவினரால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் யுவதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த மனைப்பொருளியல் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. (ம-157)


**அபூர்வ ஜோதிடம்**

சித்தரின் புதுமையான மருந்தில் படுக்கையில் விழுந்த நோயாளியும் காப்பாற்றப்படல்.

சனி,ஞாயிறு 9.00-1.00

சேச் முன் லேன், முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

(24437)(35-13-16-24)


## திருட்டுத் தொடர்பாக பொலீஸ் பிரசுரம்

திருடர்கள் தொடர்பாக பொதுமக்களை மிக அவதானமாக இருக்குமாறு நெல்லியடிப் பொலீஸார் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ள இப்பிரசுரங்களில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் திருட்டு, வீடுகளில இரவு, பகல் வேளைகளில் நடைபெறும் திருட்டுக்கள் என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளதுடன் திருட்டுக்களைத் தவிர்ப்பதற்கான நடைமுறைகளைக் கையாண்டு திருட்டுக்களைத் தவிர்க்க உதவுமாறும் கேட்கப்பட்டுளளது. (ம-173)

## நன்றி நவில்கின்றோம்



கிளிநொச்சி, கரடிப்போக்கு, கண்டி வீதியிலுள்ள மஸ்ஜிதுல் ஆப்தீன் பள்ளிவாசல் கட்டடத் திருத்த வேலைகளுக்காக 100 பக்கெற் சிமெந்து, கூரை, சீற் வேறு செலவுகளுக்கான கொடுப்பனவு என்பவற்றை வழங்குவதாக உறுதியளித்த

மாண்புமிகு அமைச்சர் **உயர்திரு. தி.மகேஸ்வரன்**

*(இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு)*

அவர்களுக்கு நாம் எமது மனமார்ந்த நன்றிகளைத தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

- வடபகுதி முஸ்லிம்கள்,
- கிளிநொச்சி முஸ்லிம்கள்

ஆகிய நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்களாக உள்ளோம்.

M.O லேன், சோனகதெரு, யாழ்ப்பாணம். (24445) (25-14)

(கச்சுத்துறை) அப்துல் கபூர் நஸீர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 03 - 1947 | 30 - 10 - 2001 |



**அமரர் பொன்னையா அம்பிகைபாகன்**

திதி: 06.11.2003

நீங்கள் மறைந்து இரண்டாண்டுகள் ஆனாலும் என் நெஞ்சில் என்றும் இருப்பீர்கள்.

*பத்தாவத்தை, இளவாலை.* (24380) (34-19-16-24)

மனைவி: அ.பூமலர்.

## வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

1. காசாளர் - ஆண்கள் 4 பேர்
   - பெண்கள் 2 பேர்
2. இடியப்ப வேலையாள் - 1
   உதவி ஆள் - 1
3. குசினி வேலை ஆள்கள்
4. உணவு பரிமாறுவோர் - (சப்ளையர்ஸ்)

விண்ணப்பிப்போர் நற்குணமும், நற்பண்பும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

**மலாயன் கபே**

36, 38, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ரெலிபோன்: 021 - 2373, 0777 146844

(24416) (33-19-16-24)

## ஆள் தேவை

*புத்தக விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் நேரில்சமுகம்தரவும்.*

| மக்மிலன் புத்தகசாலை | சிறிகாந்தா புத்தகசாலை |
|---|---|
| இல.03, ஆஸ்பத்திரி வீதி, | இல.165, பிரதான நிலைய வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(C/31142) (26-14)

## தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் தேசிய சான்றிதழ் [NCICT]

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கான திட்டத்தின் கீழ் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கல்வித் தகைமை - க.பொ.த. (சா/த) இரண்டு தடைவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி (கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட)
2. வயதெல்லை : 16 -25 (01.01.2004 இல்)
3. கட்டணம் : ரூபா 3000/=
4. பயிற்சிக் காலம் 6 மாதங்கள் (முழு நேரம்)
5. விண்ணப்ப முடிவு திகதி - நவம்பர் 15-2003
6. பயிற்சி நடைபெறும் நிலையங்கள்:
   ★முல்லைத்தீவு
   ★வட்டுக்கோட்டை
   ★யாழ்ப்பாணம்
   ★வவுனியா

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தே.அ.அட்டை இல., சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகைமை, விரும்பியபயிற்சி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: 29-06-2003பத்திரிகை விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

முகவரி: மாகாணப் பணிப்பாளர்
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,
இல.7, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 2383

(24444)(35-14)

## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி

## தார் ஏற்றி இறக்கல் கூலிக்கான கூறுவிலை கோரல்

கொழும்பிலிருந்து நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி யாழ்ப்பாணத்திற்கு பார ஊர்தி மூலம் ஏ/9 பாதையூடாக 200 பரல் (200 லீற்றர் கொள்ளளவு) தாரினைக் கொண்டுவருவதற்கு ஏற்றி இறக்கல் கூலிக்கான கூறுவிலைகள் (வற் வரி உட்பட) கோரப்படுகின்றன. கூறுவிலைகள் செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என முகவரியிட்டு 12.11.2003 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

04.11.2003

(C/31138)(22-14)

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
பிரதேச சபை, நல்லூர்.


**NORTH LANKA**

**கணனி நிறுவனம்**

புதிய டிப்ளோமா

கணனி வகுப்புகள்

பிரிவு II ஆரம்பம்: 05.11.2003

| | | |
|---|---|---|
| பிரதான வீதி, | பிரதான வீதி, | பிரதான வீதி, |
| சங்கானை. | பண்டத்தரிப்பு. | மானிப்பாய். |

(24440)(35-13-16-24)



உலகப் புகழ் பெற்ற L.G குளிர்சாதனப் பெட்டிகள் Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5768

(C-31122)



கொழும்பில் தலைமையகத்தைக்கொண்ட 'மினி இன் போடெல்' நிறுவனம் யாழ். மத்திய கல்லூரியில் தகவல் தொழில்நுட்பக் கண்காட்சியை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இக்கண்காட்சியில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த காட்சி அரங்குகளில் சிலவற்றைப் படங்களில் காணலாம்.

# 'பேபி ஷெரமி சுவசிங்கிதி' போட்டியின் சுவாரஷ்யமான பிராந்திய நிகழ்வுகள்

'பேபி ஷெரமி சுவசிங்கிதி' அதிர்ஷ்டப் போட்டியில் பிராந்திய மட்டத்திலான போட்டிகள் தற்போது நாடு முழுவதிலும் ஆறு பிராந்தியங்களில் தனித்தனியே நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சிகளுடன் முழுக் குடும்பத்திற்குமேயான பல வேடிக்கை விநோத நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. குழந்தைகளினதும் சிறுவர்களதும் குதூகலமும் மகிழ்ச்சியும் இந்நிகழ்ச்சிகளை மேலும் மெருகூட்டுகின்றன என 'பேபி ஷெரமி சுவசிங்கிதி' அதிர்ஷ்டப் போட்டியின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆறு பிராந்தியங்களிலும் நடைபெறுகின்ற அரை இறுதிப்போட்டிகளில் பங்குபற்ற ஒவ்வொரு பிராந்தியங்களில இருந்தும் 100 குழந்தைகள் வீதம் 6-18 மாத வயதுகொண்ட குழந்தைகள் நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டனர். ஆரோக்கியம், தோற்றம், மருத்துவ வரலாறு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே தராதரம் மிக்க வைத்தியர்கள் குழு ஒன்று இத்தேர்வை மேற்கொண்டது.

பிராந்தியப் போட்டிகளில் கலந்துகொள்ளும் குழந்தைகளும் அவர்களது குடும்பத்தினரும் நன்கு உபசரிக்கப்படுகின்றனர். அவர்களின் ஒவ்வொரு தேவையும் கேட்டறிந்து நிறைவேற்றப்படுகின்றன. முழுக் குடும்பத்திற்குமே உணவு, மென்பானங்கள் என்பனவற்றோடு பொழுதுபோக்கு அம்சங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. குழந்தைகள் ஆடை மாற்றும் நிலையங்களும் பாலூட்டல் நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. குழந்தைநல நிபுணர்களின் அறிவூட்டல் விரிவுரைகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் பரிசுப் பொதிகளுடன் புகைப்பட 'ஸ்ராண்ட்' அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது.

பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் போட்டிகளில் கலந்துகொள்ள முயற்சிசெய்தபோதும் அவர்கள் அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இவர்கள் அனைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றியறிதலைத் தெரிவிக்கும் அதேவேளை, போட்டியில கலந்துகொள்பவர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். பிராந்தியப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு தங்க நாணயத்தை பரிசாகப் பெறுவர். இவர்களில் ஒரு குழந்தை 20 லட்சம் பெறுமதியான புத்தம் புதிய வீட்டையும் ஏனையசிலர் 12 லட்சம் ரூபா பெறுமதியான சேமிப்புச் சான்றிதழ்களையும் வெல்லும வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி சத்துட்டு உயன வாகனத் தரிப்பிடத்தில் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பல வேடிக்கை விநோத நிகழ்ச்சிகளுடனான களியாட்ட விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலந்துகொள்பவர்களுக்கு இது வாழ்நாளிலேயே மறக்கமுடியாத நிகழ்ச்சியாக அமையும் என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும்.

**தொழில் வளம்**

# இந்தியாவில் இடம்பெறும் பயிற்சியில் வங்கி முகாமையாளர்கள் பங்கேற்பு

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இடம்பெறும் உயர்ந்த அபிவிருத்திக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளை முகாமையாளர்கள் மூவர் பங்கேற்கின்றனர்.

கடந்த 3ஆம் திகதி முதல் இன்று வரை நடைபெறும் இப்பயிற்சிநெறியில் கலந்துகொள்ளும் முகாமையாளர்களின் விவரம் வருமாறு:-

வி.அருளானந்தம் (மானிப்பாய் கிளை), கே.இராஜதுரை (சாவகச்சேரி கிளை), எஸ்.ஜெ.சுமணதாச (மினுவான்கொட கிளை).

இந்திய முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தினால் இப்பயிற்சி நெறி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ஓ-185)

# மக்கள் வங்கி அனுசரணையுடன் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

சங்கானை மக்கள் வங்கியின் அனுசரணையுடன் சங்கானை கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தால் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களான பிளவத்தை ம.மி.த.க. பாடசாலை மாணவா சி.கோபிநாத் (160 புள்ளிகள்), வட்டு. மத்திய கல்லூரி மாணவி கே.வினோஜா (157 புள்ளிகள்), சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர் த. வெங்கடேஸ்வரன் (154 புள்ளிகள்) ஆகியோா முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

சங்கானைக் கல்விக்கோட்டப் பணிப்பாளர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா கலந்து கொள்கிறார்.

பரிசளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஓ-9)

## 'சஹன்ய' திட்டத்தின் கீழ்

# இலங்கை வர்த்தக வங்கிக் கிளைகளில் ரூபா 3.5 கோடிவரை முதலீட்டுக்கடன்

தெல்லிப்பழை,நவ.6


'சஹன்ய' முதலீட்டுக்கடன் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிக்கிளைகளில் 3கோடி 50 லட்சம் ரூபா வரையிலான முதலீட்டுக் கடன்கள் வழங்கப்படுவதாக வர்த்தகவங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் முதலீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் நாடெங்கிலுமுள்ள வர்த்தகவங்கியின் கிளைகளூடாக இம்முதலீட்டுக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தனிநபர் ஒருவர் உரிய பொறுப்புகளை கையளித்து முதலீட்டுக்கடன்களைப் பெறமுடியும். இக்கடன்களின் மீளளிப்புக் காலம் பத்து வருடங்களாகும். இக்கடன் மிகக்குறைந்த வட்டி வீதத்திலேயே வழங்கப்பட்டு வருகின்றது.

இதேபோன்று கனரகவாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடன்களையும் தற்போது வர்த்தக வங்கி வழங்கிவருகிறது. சுமார் 11 சத வீதத்திலிருந்து 12 சதவீதம் வரையிலான வட்டியில் 5 வருட மீளளிப்புகால அவகாசத்துடன் இக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். (ஓ-150)

# மழை காலத்தில் பெருகும் நுளம்பை கட்டுப்படுத்தி டெங்கைத் தடுப்போம்



**சூடாநாட்டில் மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. இது நுளம்புகள் அதிகரிக்கும் காலமுமாகும். நுளம்புகளால் பரவும் நோய்களுள் டெங்குக் காய்ச்சலும் ஒன்று. இந்நோய்க்குக் காரணமான நுளம்புகளை ஒழித்தல் மற்றும் இந்நோயை காலநேரத்துடன் இனங்காணுதல் ஆகியவற்றை இங்கு தொகுத்து வழங்குகிறோம்.**

டெங்கு அல்லது அது போன்ற வேறு வகையான விஷக்காய்ச்சல்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலும் தென் ஐரோப்பா,வட ஆபிரிக்கா, மத்தியகிழக்குப் பிரதேசங்கள், ஆசியா, ஆஸ்திரேலியா, இந்து சமுத்திரத்திலுள்ள பல்வேறு தீவுகள் மற்றும் கரீபியன் தீவுகள் ஆகிய பிரதேசங்களில் பரவத் தொடங்கின. கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்நோய் மிக விரைவாகப் பரவியுள்ளதோடு, ஆண்டுதோறும் சுமார் இரண்டு கோடி மக்கள் இந்நோயினால் பீடிக்கப்படுகின்றனர். ஆண்டொன்றுக்கு இந்நோயினால் இறப்போர் தொகை சுமார் 24 ஆயிரமாக உள்ளது.

டெங்குக் காய்ச்சல் சாதாரண காய்ச்சலைப்போன்றே ஆரம்பிக்கும். 'டெங்கு' வைரஸ் கிருமி ஒன்றினாலேயே ஏற்படுகிறது. டெங்குக்காய்ச்சல் (DF) மற்றும் டெங்கு இரத்தப் போக்குக் காய்ச்சல்(DHF) என இது இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.


**டெங்குக் காய்ச்சல்**

முதலாம் வகையான டெங்குக் காய்ச்சல்.

திடீரெனத் தோன்றும் [illegible] காய்ச்சல், கடுமையான [illegible] கண்களின் கீழ்ப் பகுதியில் ஏற்படும் வலி, தசைக் கோளங்கள் மற்றும் மூட்டுக்களில் ஏற்படும் வலி போன்ற அறிகுறிகளோடு சாதாரணமாகத் தோன்றும்.

**இரத்தப்போக்குக் காய்ச்சல்**

குறிப்பிட்ட ஒரு வைரஸ் தாக்கத்தின் பாதிப்பினால் இரண்டாம் வகை




யான டெங்கு இரத்தப்போக்குக் காய்ச்சல் ஏற்படுகிறது. குழந்தைகளையும் சிறுபிள்ளைகளையுமே இந்நோய் பெருமளவுக்குத் தாக்குகிறது. சாதாரண காய்ச்சலுடன் ஆரம்பிக்கும் டெங்கு - இரத்தப் போக்குக்

**~சரா~**

காய்ச்சலின்போது, தலைவலி, கண்கள் மற்றும் மூட்டுக்களில் மற்றும் தசைக்கோளங்களில் வலி ஏற்படுதல். உடலில் சிவப்பு நிறமான சிறிய கொப்[illegible] தோன்றுதல், மூக்கிலும் ஈறுகளிலும் இரத்தம் பெருகுதல் போன்ற ஏனைய அறிகுறிகள் படிப்படியாகத் தோன்றும். மலத்திலும் வாந்தியின் போதும், இரத்தம் காணப்பட்டு நோயாளி பலவீனத்துடன் காணப்பட்டால் டெங்கு இரத்தப்போக்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியும். இது ஓர் உயிர்க்கொல்லி நோய்க்கான அறிகுறியாகும். பகற்பொழுதில் காணப்படும் "ஏட்ஸ் எகப்ற்" என்னும் நுளம்பு இனமே டெங்கு இரத்தப் போக்குக் காய்ச்சலைப் பரப்புகிறது. பல நாள்களாகத் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் சுத்தமான நீரிலிருந்து இந்த வகை நுளம்பு பெருகுகிறது.

**இனங்காணல்**

டெங்குக் காய்ச்சலை இனங்கண்டுகொள்ளக்கூடிய தெளிவான சில அறிகுறிகள் பின்வருமாறு:-

★ திடீரென ஏற்படும் கடுமையான காய்ச்சல். இது இரண்டு நாள்கள் முதல் ஒன்பது நாள்கள் வரையில் இருக்கும்.

★ கடுமையான தலைவலி, விசேடமாக நெற்றியின் முன்பகுதியில் வலி இருக்கும்.

★ மூட்டுக்களிலும் தசைக்கோளங்களிலும், உடம்பு முழுவதிலும் ஏற்படும் வலி.

★ கண்களின் கீழ்ப்புறத்தில் வலி ஏற்படல், கண்களால் பார்க்கும்போது வலி அதிகரித்தல்.

★ கோப்பி நிறத்தில் வாந்தியெடுத்தல்.

டெங்கு இரத்தப்போக்குக் காய்ச்சலை இனங்காண உதவும் உறுதியான அறிகுறிகள் வருமாறு:-

★ டெங்குக் காய்ச்சலைப் போன்ற காய்ச்சலோடு மேலதிகமான அறிகுறிகளுள் ஒன்று அல்லது சில காணப்படும்.

★ வயிற்றில் ஏற்படும் தொடர்ச்சியான வலி.

★ மூக்கிலிருந்து இரத்தம் வழிதல்.

★ இரத்தத்துடன் கூடிய அல்லது இரத்தம் இன்றி வாந்தியெடுத்தல்.

★ தார் போன்ற கடுமையான நிறத்தில் மலம் வெளியேறுதல்.

★ அதிகமான தாகம் - உதடுகள், வாய் போன்றவை வரண்டு போகுதல்.

★ உடல் பலவீனமடைதல்.

★ சருமத்தில் சிவப்பு நிறத்திலான சிறு கொப்புளங்கள் தோன்றுதல்.

**பரவும் முறை**

'டெங்கு' நோயைப் பரப்பும் கிருமிகள் அடங்கிய "ஏட்ஸ் எகப்ற்" என்னும் நுளம்பு கடிப்பதன் மூலம் இந்நோய் பரவுகிறது. இந்நுளம்பு பாதிக்கப்பட்ட ஒருவரைக் கடிக்கும்போது அவரது உடலிலிருந்து கிருமிகள் நுளம்பின் உடலுக்குள் புகுந்து விடுகின்றன. அதே நுளம்பு சுகதேகி ஒருவரைக் கடிக்கும்போது அவருடலில் டெங்குநோய்க் கிருமிகள் பரப்பப்படுகின்றன.

இந்நுளம்பு கடித்து 5 முதல் 7 நாள்களுக்குள், நோய்க்கான முக்கிய அறிகுறிகள் தோன்றவாரம்பிக்கும். எந்த நுளம்பின் உடலுக்குள் டெங்கு வைரஸ் உள்ளதெனக் குறிப்பிடுக்கூற இயலாதுள்ளதால், சகலவிதமான நுளம்புகளிலிருந்தும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமாகும்.

**நுளம்புகளின் உற்பத்தி இடங்கள்**

வீட்டினுள் உள்ள மூலை முடுக்குகளும் வீட்டுக்கு வெளியேயுள்ள குளிர்ந்த, நிழலான இடங்களும் இந்நுளம்புகள் பெருக வாய்ப்பான பகுதிகளாகும். சேமித்து வைக்கப்பட்டுள்ள சுத்தமான நீரின் மேல் பெண் நுளம்பு முட்டைகளை இடுகின்றது. பத்துத் தினங்களில் முட்டைகள் வெடித்து குடம்பிகள் வெளிப்படுகின்றன.

மழைநீர் தேங்கி நிற்கும் வெளிகளிலிருந்து இந்த இன நுளம்புகள் பெருகுகின்றன. பரல்கள், ரின்கள், ரயர்கள், பூந்தொட்டிகள், எறும்புப் புற்றுகள், தேங்காய்ச் சிரட்டைகள், கோம்பைகள், வீசப்படும் வெற்றுப் போத்தல்கள், சட்டி, பானைகள் போன்றவை நுளம்புகளின் பெருக்கத்திற்கு முக்கியமானவைகளாக உள்ளன. இவற்றை அகற்றுவதாலும் இரசாயன நுளம்புக் கொல்லிகளை பிரயோகிப்பதாலும் மற்றும் நுளம்புவலைகளைப் பயன்படுத்துவதாலும் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

## 90 ஆவது அகவையில் வாழ்த்துகின்றோம்



ஈச்சமோட்டையைச் சேர்ந்த
**திருமதி**
**நடராஜா வடிவம்மா**
அவர்கள் தனது
90 ஆவது பிறந்த நாளில்
நலமே வாழ உளமார
வாழ்த்துகின்றோம்.
மகள்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

ஈச்சமோட்டை, கடற்கரைவீதி,
யாழ்ப்பாணம்.
(24457) (25-12-25-16)

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சிக் கிளையைச் சேர்ந்த ஆறுமுகம் பேக்கரி உரிமையாளர் **வே.ஆறுமுகம்** அவர்களின் அன்பு மகள்

**ஆறுமுகம் அருட்சோதி**

அவர்களின் மரணச்செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

*559, நாவலர் வீதி,* நிர்வாகம்
*யாழ்ப்பாணம்.* (சி-31144)(25-12-16-25) யாழ். மா.பே.உ. சங்கம்.

## கூறுவிலை கோரல்

**கொடிகாமத்திலிருந்து பளை வரைக்குமான 33 கேவி மின்மார்க்கம் அமைப்பதற்குத் தடையாக உள்ள மரம், செடி கொடிகளை அகற்றுதல்**

மேற்படி வேலைக்கான கூறுவிலை தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இலங்கை மின்சார சபை வடமாகாண கேள்விச் சபையால் கோரப்படுகின்றது.

இக்கூறுவிலைக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 250/- செலுத்தி 2003.11.13 ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை அலுவலக நாள்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கூறுவிலைப் படிவங்களின் இரு பிரதிகளில் மூலப்பிரதி வேறாகவும், இணைப்பிரதி வேறாகவும் கடித உறையில் இடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கூறுவிலையின் பெயர், முடிவு திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு 2003.11.14ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது இவ்வலுவலகத்தில் உள்ள கேள்வி கோரல் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கே திறக்கப்படும்.

தாமதமாகவோ, இவ்வலுவலகத்தில் வழங்கப்படாத பத்திரங்களிலோ சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை மின்சாரசபை,
536/01, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 2003.11.05.

தலைவர்,
கேள்வி கோரல் சபை,
வடமாகாணம்.
(C/31146) (26-12-16-25)

## ஆவணங்கள் எதுவும் இன்றிய வாகனங்களைப் பதியும் ஏற்பாடு

**இத்தால் சகலரும் அறிய வேண்டியது.**

பின்வரும் இலக்கங்களைக்கொண்ட வாகனங்கள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் எங்களது பெயரிலும், கடன்பெற்றோர் பெயரிலும் மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 41 - 3574 | 27 - 1939 | 26 - 8936 |
| 27 - 4673 | 42 - 3927 | 27 - 9771 |
| 28 - 1754 | 42 - 1182 | 41 - 9454 |
| 28 - 1168 | 41 - 9556 | 26 - 8419 |
| 26 - 5112 | 26 - 7299 | 27 - 9052 |
| 28 - 1862 | 26 - 4568 | 28 - 7261 |
| 26 - 8746 | 40 - 7041 | 28 - 6263 |
| 41 - 8617 | 28 - 9697 | 41 - 6126 |

பின்வரும் எங்கள் வாகனங்கள் எங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டு நாங்கள் குத்தகைக்குக் கொடுத்துள்ளோம்.

| | |
|---|---|
| 41 - 4129 | 40 - 2295 |
| 43 - 9944 | 42 - 0761 |

மேற்படி இவ்வாகனங்களை வைத்திருப்பவர்கள் தங்கள் ஆவணங்கள் தொலைந்துவிட்டன என்று சொல்லிப் பொய்ச்சத்தியக் கடதாசி முடித்து தங்கள் பெயரில் பதிய முற்படலாம். எனவே, சமாதான நீதிவான்கள், பிரதேச செயலர்கள், மோட்டார் வாகன பதிவு திணைக்கள உத்தியோகத்தர்கள் தயவுசெய்து இதனை கவனத்திற் கொள்ளவும்.

முகாமைத்துவ இயக்குநர்,
**மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டட்,**
555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(24451) (34-12-16)


முதல் முறையாக உலகளாவிய புகைப்படம் & விளம்பரக் கண்காட்சி



Image TODAY COLOMBO
போட்டோ & வீடியோ கண்காட்சி
விளம்பரக் கண்காட்சி

2003 நவம்பர் 7ம், 8ம், 9ம் திகதிகளில்
BMICH, கொழும்பு
காலை 10:00 மணிமுதல் மாலை 7:00 மணிவரை

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

முதன் முறையாக இலங்கையில்
அனைத்துலக உற்பத்திகளும் சேவைகளும்

உங்கள் கேமராவுடன் வாருங்கள். அழகிகளை 'கிளிக்' செய்யுங்கள் பரிசுகள் வெல்லுங்கள்!.

புகைப்படப் பயிற்சிப் பட்டறை
வெட்டிங் & போர்ட்ரெய்ட் போட்டோகிராபி - நவம்பர் 8ம் திகதி
பெஷன் & டேபல் டொப் போட்டோகிராபி - நவம்பர் 9ம் திகதி
By KL RAJA PONSING, Ambitions Photography Academy, INDIA
முந்துங்கள்! குறிப்பிட்டளவு ஆசனங்களே உள்ளன
Co-ordination : Mission de Vision, Colombo.

Inauguration by His worship Mayor of Colombo
Hon. Mr. Prassanna Gunawardane
at 9.30 a.m. on 7th Nov. 2003

ORGANISERS: BUY SELL interactions
For more details Contact:
Buysell Interactions Pvt Ltd
Phone: 0722 781399, 0722 897900, 0777 676145
e-mail: info@buysellint.com
Web: www.buysellinteractions.com

கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள்

Local Partners: York Conventions Pvt. Ltd, Phone: 075 367285, 075 367286

பயிற்சிப் பட்டறை | பெஷன் ஷோ | இலவச பரிசுகள்

GOLDEN SPONSOR | Co-Sponsor | Media Sponsor
HAYLEYS Consumer | Portable Display Systems | DailyMirror | FUJIFILM

An exhibition for AGILE Business


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 523 |
| திகதி | 04.11.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4309343-4324617

வெற்றி இலக்கங்கள் **10 14 22 28**

லக்கினம்
சிம்மம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,741,600/-
வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,489,850/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 335,210 | 10 | 3,352,100 |
| 2 இலக்கங்கள் | 30,737 | 20 | 614,740 |
| 1 இல + லக்கினம் | 30,358 | 30 | 910,740 |
| 2 இல + லக்கினம் | 2,776 | 100 | 277,600 |
| 3 இலக்கங்கள் | 822 | 500 | 411,000 |
| 3 இல + லக்கினம் | 81 | 5,000 | 405,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,741,600 | - |
| மொத்தம் | 399,987 | - | 6,271,180 |

- மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **6,271,180/-**

தொடர் இல. 5300837க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 07ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
**4313814-1-70**
**4320533-5-57**
**4312606-5-90**
**4311366-2-33**
**4313442-9-31**


வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M





கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை வழங்கும் கொரிய மருத்துவர்கள் நோயாளி ஒருவருக்கு கட்டியை கரைப்பதையும், மூட்டு வாதத்துக்கு சிகிச்சை அளிப்பதையும் நரம்பு நோய்க்கு ஊசிகளை குற்றி சிகிச்சையை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

# கொரிய நிபுணர்கள் வழங்கும் மருத்துவசேவை கைதடியில்

யாழ்ப்பாணம்,நவ.6

கொரிய நாட்டின் வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவினரின் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நேற்று முன்தினம் கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் ஆரம்பமாகியது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் கலந்துகொண்டார்.

கொரிய தூதரகத்தின் அனுசரணையுடன் குடாநாட்டு மக்களுக்கு இலவச மருத்துவ சேவையை வழங்குவதற்கென 'கொம்ஸ்ரா' அமைப்பின் ஏற்பாட்டில் தென் கொரியாவிலிருந்து வந்த வைத்திய நிபுணர்கள் இதில் சிகிச்சை வழங்குகின்றனர்.

கடந்த இருதினங்களும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் இந்தச் சேவை முகாமில் கலந்துகொண்டு தமது நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். இன்றும் நாளையும் தொடர்ந்து இந்தச் சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளது.

இதில் பாரிசவாதம், முதுகுத்தண்டு நோய்கள், மூட்டுவலி, கழுத்துவலி, நாரிப்பிடிப்பு, இரத்த அழுத்தம், சலரோகம், மன அழுத்தம், நுரையீரல் தொடர்பான நோய்கள் உட்படப் பலவிதமான நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

16 வைத்திய நிபுணர்கள் அடங்கிய இக்குழுவினருடன் கொழும்பில் இருந்து ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் அசோக மலிமகே, செயலாளர் ஏ.எம்.சந்திரபால ஆகியோரும் வருகைதந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மருத்துவ சிகிச்சை முகாமில் குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றுள்ளதுடன் பலரும் இச்சிகிச்சைகளின் பலாபலன்கள் குறித்துத் திருப்தி தெரிவித்ததாக கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி விக்கினேஸ்வரி கைலாசபதி தெரிவித்தார். (ஒ-10-ரி)

## எரியுண்ட நபர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்,நவ.6

தீயினால் எரியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் நேற்று புதன்கிழமை மரணமானார்.

மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த நடராசா தையல்முத்து (வயது 77) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சமையல் அறையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக படுகாயமடைந்தவர் என்று கூறப்பட்ட மேற்படி நபர், முதலில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டிருந்தார். (ஒ-6-15)

# கொழும்புத்துறைக்கு பரீட்சார்த்த குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.6

கொழும்புத்துறைப் பகுதிக்கு யாழ். மாநகரசபையினால் பரீட்சார்த்தமாக குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுவருகின்றது.

காலை 8.30 மணி தொடக்கம் 9.00 மணிவரை அரை மணித்தியாலயங்களுக்கு இந்த பரீட்சார்த்த நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்தப் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகத்தை யாழ்.மாநகரசபை மேற்கொண்டு வந்தது. யுத்த அனர்த்தம் காரணமாக அது தடைப்பட்டிருந்தது. தற்போது அகதிகளுக்கான ஐ.நா.தூதரக நிதி உதவியுடன் குடிதண்ணீர் விநியோகத் திட்டவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.

அடுத்த இரு வாரகாலத்தினுள் ஏனைய பகுதிகளுக்கு காலை, மாலை எனக் குடிதண்ணீர் விநியோகிப்பது போன்று கொழும்புத்துறைக்கும் சீரான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7-86)

# விசேட தேவையுடையோரை பராமரிக்கும் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பு

மண்டைதீவு,நவ.6

தீவுப் பகுதியில் உள்ள விசேட தேவை உடையவர்களுக்கு (வலது குறைந்தோரை) சமுதாய மட்டத்தில் வைத்து புனர்வாழ்வு வழங்கும் தொண்டர்களை பயிற்றுவிப்பதற்கான பயிற்சி நெறியின் அங்குரார்ப்பணம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சமூக நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பிற்கு வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு மற்றும் காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 40 தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பயிற்சிகள் 10 தினங்கள் தொடர்ந்து இடம்பெறும்.

வேலணை உதவிப்பிரதேச செயலர் பலோகநாதன் தலைமையில் இடம்பெறும் இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போலும், சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இராதாகிருஷ்ணனும் கௌரவ விருந்தினர்களாக வேலணை ப.நோ.கூ. சங்கத் தலைவர் க.நல்லைநாதன், தீவகக் கோட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-5-88)

# விடுதலைப் புலிகள் முன்வைத்த ஆலோசனை வரைவு: இறைமையுள்ள தனிநாட்டுக்கான உறுதியான அத்திபாரம்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிக்கை

கொழும்பு,நவ.6

அரசிடம் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைவு இறைமையுள்ள தனிநாடு ஒன்றுக்கான அத்திபாரத்தை உருவாக்குவதாக அமைகிறது.

- இவ்வாறு தெரிவித்துள்ளது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

வடக்கு - கிழக்குக்கான 'இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை' தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் திட்டவரைவு குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நீண்ட ஆய்வு அறிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது. அதில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இந்தத் திட்ட வரைவு, எதிர்காலத்தில் இறைமையுள்ள தனிநாடு ஒன்றுக்கான அத்திபாரத்தை உருவாக்குவதாக அமைகிறது. அது ஸ்ரீலங்கா குடியரசின் இறைமையையும் அரசமைப்பையும் திட்டவட்டமாக மீறுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு, 2000 ஆம் ஆண்டின் அரசமைப்பு நகலில் காணப்படுவது போன்ற முன்னைய நோக்கில் -

ஐக்கிய இலங்கைக்குள் - பேச்சுவாயிலான அரசமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையில் - அதிகாரப் பகிர்வு செய்வதன் மூலமே தீர்வு காணலாம் என்ற தெளிவான நிலைப்பாட்டையே சுதந்திரக்கட்சி கொண்டுள்ளது.

தமிழ்ச் சமூகத்தின் மனக்குறைகள், அபிலாஷைகள் போன்றவை வடக்கு - கிழக்கில் நினைவாற்றல் காலத்துக்கு முன்பிருந்தே வசித்து வரும் ஏனைய சமூகங்களின் அபிலாஷைகளையும் கவனத்தில் எடுத்து - நியாயமான, சமத்துவமான முறையில் கவனித்துத் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே ஜனாதிபதி தொடர்ந்து கொண்டுள்ளார். அதை அவர் அவ்வப்போது பல தடவைகள் வெளிப்படுத்தியும் வந்துள்ளார்.

எந்த இறுதித் தீர்வும் சமநிலையானதாகவும் அனைத்து சமூகங்களுக்கும் ஏற்புடையதாகவும் இருக்க வேண்டும். எமது சமூகத்தின் பல்லினத் தன்மை பேணப்பட வேண்டும். ஆட்சி அதிகாரம் ஏனைய சமூகங்களைப் பாதிக்கும் வகையில் ஏக போகமாக தனி ஒரு சமூகத்துக்கு வழங்கப்படக் கூடாது.

எந்த இறுதி அரசமைப்பு ஒழுங்குபடுத்தலும் எமது மக்களின் ஐக்கியத்தையும் ஸ்ரீலங்கா குடியரசின் ஐக்கியம் மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பேணுவதாகவே இருக்கவேண்டும். அது ஐக்கியத்தை மேம்படுத்துவதாக இருக்கவேண்டுமே தவிர, பிரிவினையை ஊக்குவிப்பதாக இருக்கக்கூடாது. ஜனநாயகக் கட்டமைப்பிலான எமது அரசியல் முறைமை முழு நாட்டிற்குமே விஸ்தரிக்கப்பட வேண்டும். ஜனநாயகம் தெற்கு மக்களால் மட்டும் அனுபவிக்கப்படுவதாகவும் வடக்கு - கிழக்கு மக்களுக்கு அது மறுக்கப்படுவதாகவும் இருக்கக் கூடாது. ஸ்ரீலங்காவில் இரண்டு அரசுகள் இருக்க முடியாது; ஒன்று மட்டுமே இருக்க முடியும்.

புலிகளின் கருத்தை வெளியிடும் யோசனைகளில் 'இலங்கை குடியரசு' என்பது ஒரு தடவை கூடக் குறிப்பிடப்படவில்லை என்பதை எமது கட்சி சுட்டிக்காட்டுகின்றது. அர்த்தமின்றி அது தவிர்க்கப்படவில்லை.

அந்த யோசனை முழுவதிலுமே ஸ்ரீலங்கா என்பது 'தீவு' என்றே கூறப்பட்டுள்ளது. அது ஒரு வெற்றிடமாக உள்ள இடம்போன்றும் - இலங்கைக் குடியரசின் ஐக்கியம் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவை தொடர்பாக சட்டரீதியாக உரிமையுள்ள பல தரப்பினர் உள்ளனர் என்ற சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மையை அங்கீகரிக்க மறுத்து - அது குறித்து ஐதே முன்னணி அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினர் மட்டும் அந்த வெற்றிடம் குறித்து ஓர் ஒப்பந்த ஏற்பாட்டை (அரசமைப்பு ஏற்பாட்டைக்கூட அல்ல) செய்யலாம் என்பது போன்றும் கருத்து முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

பிணக்குக்கு இறுதியான தீர்வு காணப்பட வேண்டுமானால் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பூசலுக்கு அடிப்படையான விடயங்கள் குறித்து உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என சுதந்திரக்கட்சி கருதுகிறது.

இடைக்கால நிர்வாகம் குறித்து ஐதேமு. அரசோ அல்லது புலிகளோ சமர்ப்பித்துள்ள திட்டவரைவுகளில் நாட்டின் இந்தத் தேசியப் பிரச்சினை பற்றிய அடிப்படை அம்சங்கள் குறித்து குறிப்பு எதனையும் சுதந்திரக் கட்சியினால் அவதானிக்கமுடியவில்லை.

சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்கள் நல்லெண்ணம் மற்றும் உறுதிப்பாட்டின் மூலம் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு கண்டு, வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தமது இடங்களுக்கு மீளத் திரும்பக்கூடிய புனரமைப்பு புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் சட்டரீதியான நிர்வாகக் கட்டமைப்பை குறுகிய காலத்தில் உருவாக்க முடியும் என சுதந்திரக் கட்சி கருதுகின்றது. அத்தகைய அணுகுமுறை விருப்பத்துக்குரியது மட்டுமல்ல; சாத்தியமானதும்கூட.

எந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பும் இறுதித் தீர்வின் பகுதியாகவே அமைய முடியும் என்பதையே எமது கட்சி நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றது.

இதைத்தான் 2000 ஆம் ஆண்டின் எமது அரசமைப்பு நகல் எடுத்துக் கூறுகின்றது. அதன்படி இறுதித் தீர்வுக்கான அரசமைப்பு நகல் இயங்கத் தொடங்கும் சமயத்தில்தான் இடைக்கால நிர்வாகக் கவுன்ஸிலும் செயற்படத் தொடங்கும்.

இதைத்தான் கடந்த 21 ஆம் திகதி புதுடில்லியில் வெளியிடப்பட்ட இலங்கை - இந்திய கூட்டறிக்கையும் வலியுறுத்தியது. அதனை சு.கட்சியும் ஆதரிக்கின்றது.

முஸ்லிம் பிரதிநிதித்துவத்துடனான பங்களிப்புடன் இறுதித் தீர்வை நோக்கிய சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே - அது பற்றிய கண்காணிப்பின் கீழேயே - சர்வதேச சமூகத்தின் நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும் என ஜப்பானில் நடைபெற்ற உதவும் நாடுகளின் கூட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது. அதைவிடாது பற்றி உறுதியாக நிற்கும்படி சர்வதேச சமூகத்திடம் கோருகின்றோம்.

- இவ்வாறு சுதந்திரக்கட்சியின் நீண்ட ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வீதி மூடப்பட்டது

தென்மராட்சி,நவ.6

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி வாகனப்போக்குவரத்துக்குத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த வீதியில் உள்ள மதகு திருத்தப்பட்டு வருவதால் அடுத்தே இவ்வாறு மூடப்பட்டுள்ளது. (ஐ-10-117)

## பேராளர் சங்கம நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.6

வலிகாமம் மேற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த பேராளர் சங்கம நிகழ்வு கடந்த சனிக்கிழமை மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ-10-6)

## சிறுவர் பாதுகாப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.6

சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பை மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த சனி, ஞாயிறு தினங்களில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் சுமார் 100 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ஐ-10)

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இலங்கை விஜயம் கேள்விக்குறி!

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இலங்கை விஜயம் திட்டமிட்டபடி நடைபெறுமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியே இதற்குக்காரணம்.

இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, எதிர்வரும் 13ஆம் திகதி இங்கிலாந்து அணி இலங்கைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இலங்கையின் முக்கிய அமைச்சர்கள் மூவரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்தமையைத் தொடர்ந்து இங்கிலாந்து அணியின் இலங்கை விஜயம் கேள்விக்குறியாகியுள்ளது.

இதுதொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இயக்குநர் ஜோன் தீட் நேற்றுமுன்தினம் கூறுகையில்,

"இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். அங்கு நிலைமை இன்னும் ஆரம்பகட்டத்திலேயே உள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக (பிரிட்டிஷ் அரசாங்கத்தின்) வெளிவிவகாரத்துறையுடன் நாம் நெருங்கிய தொடர்பு கொண்டு நிலைமையை அவதானித்து வருகின்றோம்.

இங்கிலாந்து அணியின் சுற்றுலா குறித்து நான் எதிர்வு கூறப்போவதில்லை" என்றார்.

ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் தலைவர் திலங்க சுமதிபால கருத்துத் தெரிவிக்கையில், "அமைச்சர்கள் பதவி நீக்கம் இச்சுற்றுலாவைப் பாதிக்காது என எண்ணுகிறேன். அது ஓர் அரசியல் நடவடிக்கை மட்டுமே" என்றார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் ஊடக முகாமையாளர் ரோய் இலங்ககோன் இது தொடர்பாகக் கூறுகையில், "இலங்கையில் இங்கிலாந்து அணி பாதுகாப்பாக போட்டிகளில் பங்குபற்றமுடியும். முழு நாடும் இங்கிலாந்து அணியின் சுற்றுலாவை எதிர்பார்த்துள்ளது" என்றார்.

இங்கிலாந்து அணியின் இலங்கைச் சுற்றுலாவின் மூலம் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்கு பல கோடி ரூபா வருமானம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணி அறிவிப்பு

இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

10 பேர் கொண்ட இவ்வணி புதிய வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசையைக் கொண்டுள்ளது.

முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான தில்ஹார பெர்னாண்டோ, பிரபாத் நிசங்க ஆகியோர் காயத்திலிருந்து முழுமையாக குணமடையவில்லை. அதனால் சமிந்தவாஸ், தினுஷ பெர்னாண்டோ, நுவன் சொய்ஸா ஆகியோர் வேகப்பந்து வீச்சாளர்களாக அணியில் இடம்பெற்றுள்ளனர்.

போட்டிகளுக்கான 11 பேர் கொண்ட அணியில் முத்தையா முரளிதரன், குமார் தர்மசேன, உப்புல் சந்தன ஆகிய மூன்று சுழல்பந்து வீச்சாளர்கள் சேர்க்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து கூறுகையில்,

சூழ்நிலைகளைப் பொறுத்தே "இறுதி அணி தெரிவுசெய்யப்படும். பொதுவாக இலங்கையில் எதிர்பார்க்கப்படுவதை விட வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக அமையலாம். கடந்த சுற்றுப்போட்டியின் போது தம்புள்ள ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கே சாதகமாக அமைந்தது" என்றார்.

# சஞ்சீவன் ஞாபகார்த்த போட்டியில் யாழ். இந்து அணி சம்பியனாகியது

படுகொலை செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் நிலக்ஷனன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், யாழ். இந்துக்கல்லூரி உபஅதிபர் பொ.மகேஸ்வரன், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அதிபர் கே.நடராசா மற்றும் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா, யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து நினைவுச் சுடரினை சஞ்சீவனின் தந்தை சோமசுந்தரம் ஏற்றிவைத்தார். சஞ்சீவனின் திருவுருவப் படத்துக்கு யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியும் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 15.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணி 17.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களை மட்டும் பெற்றது.இதில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணி வீரர்கள் துடுப்பெடுத்தாடிப் பெற்ற ஓட்டங்களின் எண்ணிக்கையைவிட யாழ். இந்து அணி வீரர்கள் உதிரிகளாக வழங்கிய ஓட்டங்கள் அதிகம். உதிரிகளாக 25 ஓட்டங்கள் கிடைத்தன.

இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இவ்வாட்டத்தின் துடுப்பாட்ட வீரராகவும், ஆட்டநாயகனாகவும் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீதிவாகரனும், சிறந்த பந்து வீச்சாளராக அதே கல்லூரியைச் சேர்ந்த ராஜாதித்தனும் சிறந்த களத்தடுப்பாளராக உடுப்பிட்டி அ.மி.கல்லூரியைச் சேர்ந்த ஜு.சந்தோசும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியில் மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பெற்றது. (ம-5-86)

# விளையாட்டு

இலங்கை அணி விவரம்: மாவன் அத்தப்பத்து, சனத்ஜெயசூரியா, குமார் சங்ககார, மஹேல ஜயவர்த்தன, ரஸல் ஆர்னோல்ட், திலகரட்ண தில்ஷான், உப்புல் சந்தன, குமார் தர்மசேன, நுவன்சொய்ஸா, முத்தையா முரளிதரன், சாமர சில்வா, நுவன் குலசேகர, சமிந்தவாஸ், ரொமேஷ் களுவிதாரண, லங்காடி சில்வா, திலுஷ பெர்னாண்டோ.

## பரிசளிப்பு விழா

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் கணிப்பீட்டறிக்கை வழங்கலும், பரிசளிப்பும் இன்று மாலை 4.30 மணிக்கு ஆசிரியர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும்.

யாழ். செயலகத்தில் இபங்கும். ஐநா. திட்ட அலுவலர் எபரமேஸ்வரன் இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

# இந்திய - நியூசிலாந்து கிரிக்கெட் போட்டிக்காக சட்டசபை நேரத்தைக் குறைக்கக் கோரிக்கை

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு ஒரிஷா சட்டசபையின் கூட்ட நேரத்தை குறைக்கக் வேண்டுமென அந்த சட்டசபை உறுப்பினர்களும் (எம்.எல்.ஏ) அமைச்சர்களும் கோரிக்கை விடுத்தனர்.

ரி.வி.எஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இன்று இந்தியா-நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன. இந்தியாவின் ஒரிஷா மாநிலத்திலுள்ள கட்டாக் நகரில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியை தாம் பார்வையிடுவதற்காக சபையின் கூட்ட நேரத்தைக் குறைக்க வேண்டுமென சட்டசபை அங்கத்தவர்களும் மாநில அமைச்சர்களும் நேற்றுமுன்தினம் கோரினர்.


## பில் கிளாக் தேவை

45 வயதுக்கு மேற்பட்ட
ஆண் பில் கிளாக் தேவை.
*உடன்வரவும்.*

**சரஸ்வதி விலாஸ்,**
இல.195 (57), கே.கே.எஸ்.றோட,
யாழ்ப்பாணம்.


## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப. 4.00 மணி யுத்கார்மல் வி.க எதிர் உதய சூரியன் வி.க.

மாலை 5.15 மணி- சென்நீக்கிலஸ் வி.க எதிர் பொற்பதி வி.க. (ம-5)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.6

திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக்கழகம், பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணி முதல் மின் ஒளியில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி - புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக்கழகம்.

இரவு 8 மணி யாழ் ஐங்கரன் விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் ஆவரங்கால் சர்வோதயா விளையாட்டுக் கழக அணி. (ம-5)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பாடசாலைகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்று மாலை 5 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும். உடுவில் மகளிர் கல்லூரியும், கொக்குவில் இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன. (ம-5)


## அழகுக் கலை பயிற்சி வகுப்புகள்

நீங்கள் அழகுக் கலையில் நிபுணராக வர விரும்புகிறீர்களா?
இதோ! உங்களுக்காகவே ஆரம்பமாகின்றன!

- ★ 12 வகையிலான Facials *(மூன்று நாள் பயிற்சி வகுப்பு)* ரூபா 2,500/-
- ★ சிகை வடிவமைப்பு Diploma in Hair Styling & Bridal Dressing - மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை *(நான்கு மதத்தவர்களுக்கான)* மூன்று நாள் பயிற்சி வகுப்பு ரூபா 2,500/-
- ★ Diploma in Bridal Dressing & Beauty Culturel and Hair Styling ரூபா 10,000/- Purming, Straightling உட்பட இன்னும் பல விடயங்கள் *(எட்டு நாள்கள் பயிற்சி வகுப்பு)*

எதிர்வரும் (13.11.2003) வியாழன் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
தொடர்ந்து 21.11.2003 வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.



- ★ *Saree Graping*
- ★ *Pottery Painting*
- ★ *Cake Icing*
- ★ *Costume Jewellary Making*
- ★ *Christal Ornaments Making*
- ★ *Fabric Painting*
- ★ *Glass Painting*
- ★ *Ceramic Painting*
- ★ *மீன் செதில் கை வேலை*
- ★ *Bauquet Making*
- ★ *Flower Arrangement ( Naturel & artifical).*
- ★ *Cookery (Chinese)*
- ★ *Pizza, Pastry Making*

அமர்வின் முதல் நாளிலேயே கற்கை நெறிக்கான முழுக்கட்டணமும் செலுத்தப்படவேண்டும்.

★ பதிவுகள் யாவும் 'உதயன்' பணிமனையில் செய்துகொள்ளலாம்.
★ வகுப்புகள் இல. 23, 4th Lane, Brown Road
*(யாழ். இந்து மகளிர் கல்லூரி பின்புறம் - சிவா அரிசி ஆலை அருகில்.)*

அழகுக்கலை நிபுணர்
திருமதி மிதுனா ஆனந்தரமணன்
Dip.in Cosmetology Bridal Dressing, Hair Dressing,
Cum Therapast (India & Sri Lanka)

026 222 4524
077 616 7729

(சி-31150) (31-12-17)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர், இலகடியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் வ.பி.போ.ச.சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும் தேசிய ஊழியர் சங்க அமைப்பாளரும் தன்னலம் கருதாத சிறந்த தொண்டருமாகிய

**செல்வரத்தினம் செல்வராஜா**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு, அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை மேன்மேலும் வளர்ந்து அவர் சமூகத தொண்டாற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றோம்.

திரு. வ. வடிவழகையன் குடும்பத்தினர்.
-அனலைதீவு வடக்கு கிராமசேவையாளர்-

*இலகடி,*
*வலந்தலை.* (சி-31156) (32-12-17-31)



## மலசலகூட கழிவகற்றும் இயந்திர வாகனம் ஓட்டுநருக்கான பதவி வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் மலசலகூட கழிவகற்றும் இயந்திர வாகன ஓட்டுநராக ஒப்பந்த அடிப்படையில் கடமைசெய்ய விரும்பும் தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

*தகைமைகள்*

01. 'ஓ' வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
02. வயதெல்லை 35 - 50 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் சாரதிக்கு கொழும்பில் மேற்படி இயந்திரம் இயக்குதல் தொடர்பான குறுகிய காலப்பயிற்சி அளிக்கப்பட்டு இயந்திர வாகனம் கையளிக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் அரசாங்க அதிபர், யு.என்.எச்.சி.ஆர். திட்ட அமுலாக்கல் பிரிவு, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் 11.11.2003ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க அதிபர்
யாழ். மாவட்டம்.
05.11.2003. (சி-31149) (31-12-17)



## மரண அறிவித்தல்

**மாணிக்கம் சோமசுந்தரம்**

(முன்னாள் உரிமையாளர், லட்சுமி பவான் - கிளிநொச்சி)

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு, சாந்திபுரம் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சோமசுந்தரம் நேற்று (05.11.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவா *(மகன்).*

(சி-31158) (31-12-17)

# ரணிலின் அரசைக் குழப்புவது சமாதான முயற்சிக்கு பெருங்கேடு

## தமிழ்க் கூட்டமைப்பு அறிக்கை

கொழும்பு,நவ.6

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின அரசை ஆட்டங்காணச் செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு பெரும் தீங்கை விளைவிக்கும்.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப் புக் கட்சிகள் எச்சரித்திருக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியன நேற்று விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கும், அத்தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம் ரணில விக்கிரமசிங்க எம்பி. பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டதற்கும் பின்னர் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது தொடர்பாக முக்கியமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

22 மாதங்களுக்கு மேலாக யுத்த நிறுத்தம் ஒன்று நடைபெற்று வந்திருப்பதோடு, ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலசுற்றுப் பேச்சுக்கள் நிகழ்ந்திருக்கின்றன. இடைக்கால நிர்வாகம் ஒன்றிற்கான அரசின் பிரேரணைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள தரப்பில் பதில் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டிருப்பதோடு, இரு தரப்பினர் சார்பிலும் பரிமாற்றப்பட்டிருக்கும் பிரேரணைகளின் அடிப்படையில விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அழிந்துபோயிருக்கும் வடக்கு - கிழக்கை மீண்டும் புனரமைக்கவும் புனர்நிர்மாணம் செய்யவும் இடம்பெயர்ந்த லட்சக் கணக்கான மக்களை மீண்டும் குடியமர்த்தவும் வடக்கு - கிழக்கிற்கு அவசரமாகத் தேவைப்படும் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் போதுமான சுய ஆட்சி வாய்ப்புக்களை ஓர் இடைக்கால நிர்வாகம் வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கும்.

2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் இருந்ததைவிட நாட்டின் இன்றைய பாதுகாப்பு நிலைமை பாரிய அளவில் உயர்வாகவே உள்ளது. கடந்த காலத்தில், முன்னெப்போதும் இருந்ததை விட, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், கௌரவமானதும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுமான ஒரு தீர்வினைக் காண்பதற்கு இன்றுள்ள நிலைமை மிக நல்லதொரு சந்தர்ப்பத்தையே தந்துநிற்கின்றது.

இப்போதுள்ள அரசை ஆட்டங்காண வைப்பதற்கு எடுக்கப்படும் தற்போதைய முயற்சிகள் சமாதான பேச்சு முயற்சிகளுக்கு பாரிய தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும். சமாதான நடவடிக்கைகளுக்கும் முழுநாட்டிற்கும் சர்வதேச சமூகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் அற்றுப்போகவும் அவை வைத்துவிடும்.

சமாதான முயற்சிகளை சீர்குலைத்து, இம்முயற்சிகள் தொடர்பில் ஒரு நிச்சயமற்ற நிலைமை ஏற படுத்தக்கூடிய நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியை மிக உறுதியாகக் கோருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் அளிக்கப்பட்ட ஜனநாயக தீர்வின் பிரகாரம் முறையாகத் தெரிவுசெய்யப்பட்டு தனது பதவியை வகித்துக்கொண்டிருக்கும் ஒரு ஜனாதிபதி, கடந்த 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்வினை மதிப்பதற்கு கடமைப்பட்டுள்ளார் என்பதையும் ஆட்சி முறைக்கான ஜனநாயக விதிகளை மீறுவது என்பது முழு நாட்டிலும் குழப்பமும், அராஜகமும் நிலவும் சூழ்நிலைக்கே இறுதியில் இட்டுச்செல்லும் என்பதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிக உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.6

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும், முறைசாராக கல்விப் பிரிவும் இணைந்து நடத்தும் கல்விக் கண்காட்சி நாளை வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பே.இரவீந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்துவைப்பார். (எ-4)

முடிந்தால் நாடாளுமன்றைக் கலைத்து

# பொதுத் தேர்தலைச் சந்திக்குமாறு ஜனாதிபதிக்கு அமைச்சர்கள் சவால்!

கொழும்பு,நவ.6

மூன்று அமைச்சர்களைப் பதவி நீக்கி, அவர்களின் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்ற ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்மானத்தை அலட்சியம் செய்வதென அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை அவசரமாகக்கூடிய அமைச்சரவை இத்தீர்மானத்தை மேற்கொண்டதோடு, முடிந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு சவால் விடுத்திருக்கிறது.

அவ்வாறான ஒரு தேர்தலின் பெறுபேறுகள் மிகவும் தெளிவானவை என்பதால் இன்றைய அரசு தேர்தலுக்கு அச்சமின்றி முகம் கொடுக்கும் என்று அமைச்சர்கள் இக்கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

எதிர்வரும் 19ஆம் திகதிவரை நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்திருப்பதால், எதிர்வரும் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு - செலவுத் திட்டத்தைப் பிற்போட நேரிட்டிருப்பதாகவும், வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் புதிய திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே, அரச எம்.பிக்கள் அனைவரையும் அழைத்து, அரசுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவேண்டும் என்று அரச எம்.பிக்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ)

# அரசைக் கவிழ்க்க முடியாது; பெரும்பான்மைப் பலம் உண்டு

## வாஷிங்ரனில் செய்தியாளர்களிடம் பிரதமர்

வாஷிங்ரன்,நவ.6

இலங்கையின் இன்றைய நெருக்கடியில் தனது அரசைக் கவிழ்க்க முடியாது என்றும், அரசுக்குப் போதிய பெரும்பான்மைப் பலம் உண்டு என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்ரனில் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் மதிய போசன விருந்தில் பிரதமர் கலந்து கொண்டார். அப்போது, வெளிநாட்டுச செய்தியாளர்கள் குழுமி நின்று பிரதமரிடம் கேள்விகளை எழுப்பினர்.

அரசு பற்றிய கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்த பிரதமரிடம் செய்தியாளர்கள் மேலும் கேள்விகளைக் கேட்க முயன்றனர். நாட்டின அரசியல் நிலைமை குறித்து தாம் ஏற்கனவே, அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பதாகக் கூறியவாறே பிரதமர் அங்கிருந்து நகர்ந்தார்.

பிரதமர் ரணில் எத்தகைய உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் வழமை போல் நேற்றுமுன்தினம் நிகழ்வுகள் அனைத்திலும் கலந்துகொண்டார்.

அமெரிக்க சமாதானக் குழுக்களின் இயக்குநர் காடி வாஸ்கியூஸுடனான சந்திப்பு, அமெரிக்க வர்த்தக அபிவிருத்தி ஏஜென்ஸிக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை இந்த நிகழ்வுகளில் முக்கியமானவையாகும்.

இதற்கிடையே, இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைவரம் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க ராஜாங்க அமைச்சுடனும் மற்றும் வெளிநாடுகள் பலவற்றுடனும் தொடர்பு கொண்டு விளக்கிவருகிறார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவும் ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள், ஜேர்மனி ஆகியவை இலங்கையின் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. (எ)

### சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,நவ.6

வட்டுக்கோட்டை, துணவி அரசடிப பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.6

அரியாலை கலைமகள் வீதி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய கும்பாபிசேக தின நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிசேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

விசேட பூசைகளைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (எ)

### புறூடி ஒழுங்கையை புனரமைக்கக் கோரிக்கை

அரியாலை, புறூடி லேன் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மழைகாலம் ஆரம்பித்திருப்பதை அடுத்து, இந்த வீதியூடாகப் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகவும் - கூறப்பட்டது.

மேற்படி வீதியைப் புனரமைக்க மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### கணனி அறை திறப்பு விழா

யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கட்டுவ. செவிப்புல கணனி அறை திறப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் து. நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் கு.விக்னேஷும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜாவும் கலந்துகொள்வர். (எ.4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



கற்கோவளத்தைச் சேர்ந்த
சதானந்தன் கேசவானந்தன்
அவர்கள் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் 03-11-2003 அன்று நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அறங்காவல் சபையினராகவும், கற்கோவளம் ஸ்ரீ வீரபத்திர ஆலயத் தலைவராகவும் தொண்டாற்றுவதுடன், இலங்கை மின்சார சபை ஊழியராகவும் சேவை ஆற்றுகின்றார். அன்னார் மேலும் பல பதவிகள் பெற்று பல்லாண்டுவாழ மனமார வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
சற்குணநேசன் குடும்பம்,
றேமன்ஸ் குடும்பம்
முகுந்தன் குடும்பம்

கற்கோவளம். (C-31159) (36-14-17)



சிவமயம்

காரைநகர் திண்ணபுரம் ஸ்ரீ ஈழத்துச் சிதம்பரம் சிவன் தேவஸ்தானம்
சிவன் அம்பிகை பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



கிரியாரம்பம்: சுபானு வருடம் ஐப்பசி மாதம் 20ஆம் நாள் 06.11.2003 வியாழக்கிழமை காலை 10.00 மணி

பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

சுபானு வருடம் ஐப்பசி மாதம் 21ஆம் நாள் நாளை (07.11.2003) வெள்ளிக்கிழமை காலை 6.30 ~ 7.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ சௌந்தர நாயகி சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் அம்பிகைக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் கைகூடியுள்ளது.

மெய்யடியார்கள் அனைவரும் வருகை தந்து எம் பெருமானை தரிசித்துத் திருவருளைப் பெற்றேகும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திண்ணபுரம், ஆ.அம்பலவிமுருகன், (24463) (30-14-17)
காரைநகர். மு.சுந்தரலிங்கம் ஆதீனகர்த்தாக்கள்.



லஷ்சுமி சினிமா இணுவில்
சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல நடித்த



திவான்
காட்சிநேரம்: 10.30, 3.00, 6.30. (பி.நே.)



நாகம்ஸ் சுன்னாகம்
2ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய
இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த



திருமலை
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00. (பி.நே.)



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய
சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பாலாவின் பிதாமகன்



காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)
ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளலாம்.



லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த



திவான் (பிலிம்)
காட்சி நேரம்: 3.00, 7.00.



நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், பூமிகா நடித்த
பத்ரி (சினிமாஸ்கோப்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
x X x



விற்பனைக்கு

சிறந்த முறையில் யாழ்ப்பாணத்தில் உடற்கோப்பு (BODY) வேலை செய்யப்பட்டதும், நல்ல பராமரிப்பில் உள்ளதுமான இரண்டு லொறிகள் எம்மிடம் விற்பனைக்கு உள்ளன.

TATA 1210
LEYLEND TUSKER

213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு-
021-222 5538 0777-878963
0777-301248 (24299)



மரண அறிவித்தல்

சந்தியாப்பிள்ளை அன்ரன் மரியநாயகம்
(துரைசிங்கம்)
(யாழ். மாநகரசபை முன்னாள் ஊழியர்)

அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் புதுவீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை அன்ரன்மரியநாயகம் (துரைசிங்கம்) அவர்கள் நேற்று (05-11-2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையினதும் பிலோமினாவினதும் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரினதும் காலஞ்சென்ற திருமதி குமார் - இராசமணியினதும் மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் பிராங்லினின் (யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையும் சேவியர்வில்பிறட், டொமினிக் அல்பிறட், அமலேஸ்வரி (சித்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் லூட்ஸ்மேரி, சிறியபுஸ்பம், தேவதாசன், பத்மாவதி, ஜெயலட்சுமி, தயாபரநாதன், அன்னசோதி, சற்குணவதி, திலகவதி, சந்திரகாந்தி, சத்தியபவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2003) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பின்னர் அல்லைப்பிட்டி புனித உத்தரியமாதா ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 07, புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(24464) (30-14-36)

தகவல்:
அ.தவமலர் (மனைவி),
அ.பிராங்கிலின் (மகன்)



ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சந்திப்பில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் அமைச்சர் கரு ஜயசூரிய உரையாற்றுகிறார்.

# தெற்காசிய அரசியலில் இத்தகைய தந்திரோபாய மாற்றங்கள் சகஜம்!

## வாஷிங்ரனில் அமைச்சர் மிலிந்த தெரிவிப்பு

வாஷிங்ரன்,நவ.6

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. தெற்காசிய அரசியலில் இதுபோன்ற தந்திரோபாய மாற்றங்கள் நிகழ்வது சகஜம் என்று கூறியிருக்கிறார் அமைச்சர் மிலிந்த மொறகொட.

'மைக்ரோ சொவ்ட்' கூட்டு நிறுவனத்துடன் இலங்கை அரசு வாஷிங்ரனில் 'ஈ-ஸ்ரீலங்கா' என்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தில் அரசின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் 'மைக்ரோ சொவ்ட்' நிறுவனத்தின் சார்பில் அதன் ஆசிய பசுபிக் பிராந்திய நிறுவனத் தலைவர் சஞ்சே மிர்சந்தினியும் கைச்சாத்திட்டனர்.

இங்கு அமைச்சர் மிலிந்த மொறகொட பேசுகையில் -

அரசுக்கு தற்போது 127 எம்.பிக்கள் ஆதரவு உள்ளது. இது பற்றி ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் பிரதமர் அறிவித்துள்ளார்.

பிரதமர் நாடு திரும்பியதும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராயப்படும் என்றும் கூறினார்.

இந்த நிகழ்வில் பிரதமர் கலந்து கொள்வதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அவர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### ஏ-9...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டிருக்கும் என்று விடுதலைப் புலிகளின் செய்தித் தொடர்பாளர் தயா நிதி மாஸ்டர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ)

### ஜனாதிபதிக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோரியிருந்தார்.

இது குறித்த தீர்ப்பில் உயர் நீதிமன்றம் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

அமுலில் உள்ள சட்ட விதிகளைத் திருத்தி அமைக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு இல்லை என்றும் -

பாதுகாப்புத்துறை சார்ந்த சிரேஷ்ட அதிகாரிகளின் பதவிக்காலம் ஜனாதிபதியால் நீடிக்கப்படாவிட்டால், அவர்கள் ஓய்வுபெற வேண்டியிருக்கும் என்றும் -

முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் பாதுகாப்புத்துறை சார்ந்த எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது என்றும் -

உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்புத்துறைசார் அதிகாரிகள் சிலரின் பதவி நீடிப்புத் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அண்மையில் விடுத்த வர்த்தமானி அறிவித்தல் உயர் நீதிமன்றின் இந்தத் தீர்ப்பின் மூலம் வலுவிழந்துள்ளது என்று இது குறித்து ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

### புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் அவசரகால நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியிருப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதா என்று அவரிடம் கேட்டபோது இப்படித் தெரிவித்தார். (ஐ)

### ஜனாதிபதியுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஊடாக ஜனாதிபதி, தமிழ்க் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் கூடினர்.

பிரதமர் தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்கி சமாதான முன்முயற்சிகளை முன்னெடுப்பது என்று அங்கு முடிவுசெய்யப்பட்டது.

அரசுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் கடிதத்தில் கூட்டமைப்பினர் கையொப்பம் இட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு நம்பிக்கை தெரிவித்து கையொப்பம் இட்டனர் என்றும் -

இந்தியாவிலிருந்து மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று மாலை நாடு திரும்பினர் என்றும் - அவர்களும் அரசுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் கடிதத்தில் கைச்சாத்திட்டனர் என்றும் - கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## ஜனாதிபதி செயலகம் மறுப்பு

நிதி அமைச்சையும் ஜனாதிபதி பொறுப்பேற்கவுள்ளார் என்று வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி, நிதியமைச்சையும் பொறுப்பேற்கவுள்ளார் என நேற்று பரவலாக செய்திகள் அடிப்பட்டன. இருந்தபோதிலும் நேற்று மாலை ஜனாதிபதி செயலகம் அச்செய்திகளை அடியோடு மறுத்துள்ளது. (எ)

### கைதுசெய்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், "போர்நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கும். அதில் எந்த ஒரு கேள்விக்கும் இடமில்லை" என்பதை எடுத்துக்கூறுமாறு ஜனாதிபதி என்னைக் குறிப்பாகக் கேட்டுக் கொண்டார் எனவும் தெரிவித்தார்.

மோதல்களை மீண்டும் ஆரம்பிக்கும் அல்லது தூண்டும் நோக்கம் எதுவும் ஜனாதிபதிக்கு இல்லை என்று கதிர்காமர் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் கூறினார். (எ)

### 127எம்.பிக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் 12.45 மணிவரை நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு அரசு மேற்கொள்ளும் மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி மீண்டும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, நிதி அமைச்சு முதல் மேலும் சில அமைச்சுக்களைப் பறிக்கவும், நிதி அமைச்சர் தயாரித்துள்ள வரவு - செலவுத் திட்ட யோசனைகளுடன் தனது யோசனைகளையும் புகுத்தி வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவும் ஜனாதிபதி திட்டமிட்டிருக்கிறார் என்றும் தகவல்கள் கிடைத்திருப்பதாக இக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக வாஷிங்ரனில் இருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது ஜனாதிபதியினால் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுப் பொறுப்புகளையும் மீண்டும் அதே அமைச்சர்களிடம் ஒப்படைக்கவேண்டும் எனக் கோரும் பிரேரணையை நிறைவேற்றவேண்டும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆலோசனை ஒன்றை முன்வைத்தார். அதனை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இ.தொ.கா.தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மலையக மக்கள் முன்னணி தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், த.வி.கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் உட்பட அக்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு 127 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதை நீதி, புத்தசாசன அமைச்சர் டபிள்யூ.எம்.லொக்குபண்டார நேற்று ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கிறார். (ஐ-8)

# இலங்கை நிலைவரம் குறித்து ஜப்பான் கவலை தெரிவிப்பு

கொழும்பு,நவ.6

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஜப்பான் கவலை தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஜனநாயக மையங்களைச் செயற்படுத்த சாதகமான - உறுதியான - நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்போதைய நிலைமைக்குத் தீர்வு காணவேண்டும்.

- இவ்வாறு ஜப்பான் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் இடைக்கால நிர்வாக ஆலோசனை வரைவு குறித்து அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசிடம் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான பதில் வரைவு, முன்னர் புலிகளுக்கு அரசு அனுப்பிவைத்த வரைவுடன் அடிப்படை விடயங்களில் வேறுபடுகிறது என்பதை ஜப்பான் புரிந்துகொண்டுள்ளது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இடைவெளி நேரடிப்பேச்சுக்கள் மூலம் இணைக்கப்படும் என ஜப்பான் உறுதியாக நம்புகிறது.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அரசியல் நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

*கேள்வி:* நீங்கள் இன்று உரையாடிய முக்கிய விடயங்கள் என்ன?

*பதில்:* இலங்கையில் சமாதான நடவடிக்கைகள் குறித்து நாங்கள் கலந்தாலோசித்தோம். இது விடயத்தில் அமெரிக்க அரசு எங்களுக்கு வழங்கி வரும் ஆதரவுக்காக அமெரிக்க ஜனாதிபதிக்கு நான் நன்றி தெரிவித்தேன். சமாதான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து முன்னெடுக்கவிருப்பதாக அவருக்குக் கூறினேன்.

இலங்கையில் இடம்பெறும் பொருளாதார மாற்றங்கள் குறித்தும், அமெரிக்கா வழங்கிய உதவிகள் குறித்தும், இரு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்தான வர்த்தக முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்தும் நாங்கள் பேசினோம். அத்தோடு, இலங்கையின் பொருளாதாரம் எவ்வாறு விருத்தியடைந்து வருகின்றது. அதனை எப்படி நாங்கள் முன்கொண்டு செல்லுகின்றோம் என்பது குறித்தும் பேசினோம்.

இவை குறித்து ஜனாதிபதியுடன் பேசவே நான் இங்கு வந்தேன். அதை நிறைவேற்றியுள்ளேன்.

*கேள்வி:* இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்துப் பேசினீர்களா?

*பதில்:* ஆம், இலங்கையில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிவதற்கு அமெரிக்க ஜனாதிபதி விரும்பினார். நான் இலங்கையிலிருந்து புறப்பட்ட சமயம் எல்லாமே ஒழுங்காக இருந்தன என்பதையும், அதன் பின்னரே நிலைமைகள் மாறின என்பதையும் ஜனாதிபதி புஷ்ஷுக்கு எடுத்துரைத்தேன். ஆனால், இது இலங்கை அரசியலில் ஒரு பகுதி தான். கடந்த இருபத்தைந்து வருடங்களாக இதேபோன்ற உயர்வு - தாழ்வுகளை நாம் கண்டுதான்வருகிறோம்.

நாடாளுமன்றத்தில் எனக்கு முழுப் பெரும்பான்மை உள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்தேன்.

*கேள்வி:* உங்கள் நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்க வாய்ப்பு உள்ளதாக அரச செய்தி ஊடகங்கள் கூறுகின்றன. அதை நீங்கள் வரவேற்கின்றீர்களா?

பதில்: நாடாளுமன்றத் தேர்தல்களை எப்போதுமே நான் வரவேற்று வந்துள்ளேன். கடந்த 26 வருடங்களாக நான் நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றேன். நானும் எங்கள் வெளிவிவகார அமைச்சரும் ஒரேசமயத்தில் நாடாளுமன்றத்துக்குள் புகுந்தோம் அன்று முதல் ஏதோ ஒருவகையில் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றோம்.

*கேள்வி:* இந்த அரசியல் நெருக்கடியை எப்படிக் கையாளப் போகின்றீர்கள்?

*பதில்:* இது நான் எதிர்நோக்கும் முதல் அரசியல் நெருக்கடி அல்ல. நான் இலங்கை திரும்பியதும் அதைத் தீர்ப்பேன். எங்களுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளது. எப்படியும் சமாதான முயற்சிகளை மீண்டும் உரிய தடத்துக்கு நாம் திரும்புவோம்.

நான் இணைத் தலைவர்களுடனும் உதவும் நாடுகளுடனும் பேசி வருகின்றேன்

*கேள்வி:* புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளீர்களா?

*பதில்:* புலிகளுடன் நான் தொடர்புகொள்ளவில்லை. நோர்வே தரப்பினரே அவர்களுடன் தொடர்பு வைத்துள்ளனர்.

நாட்டுக்கு அமைதியை கொண்டு வருவதற்கும் அதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் எனக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. - என்றார். (ஐ)

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிய அதன் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு பிளவுபடும் தருணத்தில் தனக்குள் அதிகாரத்தைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதியின் செயல் திட்டங்களுக்கு ஜே.வி.பி. பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றும் -

நெருக்கடி நிறைந்த ஒரு கால கட்டத்தில் துணிச்சலுடன் தனது பணியைச் செய்த ஜனாதிபதி தொடர்ந்தும் பல நடவடிக்கைகள் மேற்கொண்டு நாட்டைப்பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் புகழாரம் சூட்டினார்.

ஜனாதிபதி நாட்டுக்காக மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் ஜே.வி.பி. தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என அவர் உறுதி கூறினார். (எ)


யாழ்ப்பாணத்தில் டிஜிற்றல் முறையிலான கலர்ப்படப்பிரதியாக்கங்களை அறிமுகப்படுத்திய

சிறி டிஜிற்றல் கலர் லாப் &
கொனிகா கலர் லாப்

DIGITAL IMAGE SERVICE
DIGITAL PHOTO EDITING
DIGITAL PHOTOGRAPHY
CREATIVE & GREETINGS
B/W TO COLOUR

தமது வாடிக்கையாளர்களுக்காக கலர்ப்படச்சுருள்களை ஒரே நாளில் பிரதியாக்கம் செய்து கொடுப்பதோடு, எவ்வகையான டிஜிற்றல் கமராக்களிலும், கணனியிலும் மெருகூட்டப்பட்ட புகைப்படங்கள் யாவும் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து கொள்ளலாம்




குறிப்பு:- புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு ஒரு புகைப்படச்சுருளுக்கு மூன்று படங்கள் இலவசமாக வழங்கப்படும்

கொனிகா கலர் லாப்
ஸ்ரீ வெங்கடேசன் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 0212223493.

SDCL

Sri Digital Colour Lab
No:-14,Sri Vengadesan Veethy,
Jaffna. ☎:- 0212223493


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.